# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 405

சனி, 22 ஆகஸ்ட், 2026 |

பக்கங்கள் 17

www.ilakku.org










# வலிகாமம் வடக்கில் தொடரும் நில மீட்புப் போராட்டம்




வலிகாமம் வடக்கு பகுதியில் பல தசாப்தங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்துவரும் தமது பூர்வீகக் காணிகளை உடனடியாக மீளக் கையளிக்கக் கோரி, மயிலிட்டி மக்கள் 18 ஆவது வாரமாக முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை தீவிரமடைந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமது சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்த மயிலிட்டி மக்கள், கடந்த 36 ஆண்டுகளாகத் தமது சொந்த நிலங்களை இழந்து அகதிகளாகவும் இரவல் வீடுகளிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமது உரிமையை வென்றெடுப்பதற்காக ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று வீதியில் இறங்கி மக்கள், போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில் இன்றைய போராட்டத்திலும் முதியவர்கள், தாய்மார்கள் என ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு தமக்கான நீதியை வலியுறுத்தினர். "அனுரவே எம்மை சொந்த நிலங்களில் வாழவிடு! எத்தனை நாள் தான் நாம் இரவல் இடங்களில் வாழ்வது?" என்ற உருக்கமான கோஷங்களை எழுப்பியவாறு

தொடர்ச்சி: பக்கம் 15

## யாழ். ஆலயத் திருவிழாவில் லேசர் ஒளி மற்றும் பட்டாசுகளால் 150-க்கும் மேற்பட்டோருக்குக் கண் பாதிப்பு



யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத் திருவிழாவின் போது அதிக வீரியம் கொண்ட லேசர் ஒளிக்கீற்றுகள் மற்றும் வாணவேடிக்கைகள் பயன்படுத்தப்பட்டதால், 150க்கும் மேற்பட்ட பக்தர்கள் கண்பாதிப்புக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற திருவிழா மற்றும் இசை நிகழ்வின் போது பயன் படுத்தப்பட்ட அதிக சக்தி வாய்ந்த லேசர் விளக்குகள் மற்றும் பட்டாசுகள் காரணமாகவே பலருக்குக் கண் எரிச்சல் மற்றும் பார்வைக் குறைபாடு போன்றவை ஏற்பட்டுள்ளன.

தற்போது வரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுமார் 120 பேரும்,

தொடர்ச்சி: பக்கம் 05

## வடக்கு – கிழக்குக் காணிகளை உடனடியாக விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்டு, விடு விக்கப்படக்கூடியவை என அடையாளம் காணப்பட்டுள்ள தனியார் மற்றும் பொது மக்களால் பயன்படுத்தப்படுத்தப்பட்ட அரச காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதி யில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரை யாடலின் போதே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கினார். இந்தக் கூட்டத்தில் தேசிய பாதுகாப்பிற்காக இராணுவ முகாம்களின்

தொடர்ச்சி: பக்கம் 05

# சூடானில் தீவிரமடையும் மோதல்கள் – 2,00,000-க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்வு



சூடானின் கோர்டோஃபான் (Kordofan) பிராந்தியத்தில் கடந்த ஆண்டின் பிற்பகுதியிலிருந்து தீவிரமடைந்துள்ள மோதல்களால் 2,00,000-க்கும் மேற்பட்ட மக்கள் புதிதாக இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது; அதேவேளையில், அப்பிராந்தியத்தின் மிகப்பெரிய நகரமான எல்-ஓபெய்தில் (el-Obeid) உள்ள முக்கியமான நீர் மற்றும் மின்சார உள்கட்டமைப்புகளைக் குறிவைத்துத் தொடர்ந்து ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அருகிலுள்ள வடக்கு டார்பூர் (North Darfur) மாநிலத்தில் பருவமழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்வு நெருக்கடி மேலும் மோசமடைந்துள்ள நிலையில், ஐ.நா.வின் சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்பு (IOM) புதன்கிழமையன்று(19) இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. சூடான் ராணுவத்திற்கும் துணை ராணுவப் படைகளான 'ரேபிட் சப்போர்ட் ஃபோர்சஸ்' (RSF) அமைப்புக்கும் இடையிலான அதிகாரப் போட்டியால் 2023-இல் வெடித்த போரில், குறைந்தது 59,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் சுமார் 1.4 கோடி (14 மில்லியன்) மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எல்-ஓபெய்தில், நகரின் முக்கிய மின்மாற்றியை (transformer) குறிவைத்து RSF நடத்திய ட்ரோன் தாக்குதல்கள் காரணமாக, நீர் இறைப்பதற்கும், மருத்துவமனைகளை இயக்கு வதற்கும், தொலைபேசி இணைப்புகளைச் செயல்பட வைப்பதற்கும் தேவையான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. "சூடான் உலகின்

தொடர்ச்சி: பக்கம் 15

## உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் ஐரோப்பிய ஒன்றியம்



இந்த கோடையில் ஐரோப்பாவைத் தொடர்ச்சியான வெப்ப அலைகள் தாக்கியதைத் தொடர்ந்து, விளைச்சலில் கடுமையான சரிவு ஏற்படும் என ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் உள்ள விவசாய உற்பத்தியாளர்கள் எச்சரித்துள்ளனர். இந்த இழப்புகள் வரும் மாதங்களில் உணவுப் பொருட்களின் விலையை மேலும் உயர்த்தக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

மேற்கு ஐரோப்பாவில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் வெப்பமான மாதங்களாக இருந்தன. மேலும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்கள் வரை "ஐரோப்பாவின் பெரும்பகுதியைப் பாதிக்கும் வெப்ப அலைகளின் தொடர்ச்சியான அபாயம்" இருப்பதாகவும் அது எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப்பெரிய தானிய உற்பத்தியாளர்களில் ஒன்றான பிரான்சில், ஆகஸ்ட் மாத தொடக்கத்திலேயே நாட்டின் பெரும்பகுதியில் நிலத்தடி நீர் இருப்பு கடுமையாகக் குறைந்துவிட்டதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள் ளது.


பிரிட்டனியில் உள்ள ஒரு முக்கிய விவசாயிகளின் கூட்டுறவு அமைப்பான பிரின்ஸ் டி பிரிட்டானி, இந்த கோடையில் பட்டாணி விளைச்சல் 40%, பிரக்கோலி விளைச் சல் 60%, மற்றும் கூனைப்பூ விளைச்சல் 50% முதல் 100% வரை குறையும் என்று அது கணித்துள்ளது.

இதற்கிடையில், குளிர்காலத்திற்கு முன்னதாக "தீவன உற்பத்திப் பற்றாக்குறை" அதிகரித்து வருவதாக கால்நடை வளர்ப்போர் எச்சரித்துள்ளனர். பிரான்சின் முட்டை உற்பத்தி மேம்பாட்டுக்கான தேசியக் குழு, வெப்ப அலைகளால் தினசரி உற்பத்தி சுமார் பத்து லட்சம் முட்டைகள் குறைந்துள்ளதாக மதிப்பிட்டுள்ளது, அதே நேரத்தில் கோழிப் பண்ணைகளில் அதிக இறப்பு விகிதங்கள் பதிவாகியுள்ளன.

ஜெர்மன் விவசாயிகள் சங்கம் செவ்வாயன்று, தானிய உற்பத்தி கடந்த ஆண்டை விட 7%, அதாவது 33 லட்சம் டன்கள் குறைவாக இருக்கும் என்று எச்சரித்தது. நாட்டின்

தொடர்ச்சி: பக்கம் 15

## அல்சைமர் நோய்க்கான புதிய சிகிச்சை உத்தி




மூளைச் செல்களின் சேதத்தைத் தூண்டுவதாக நம்பப்படும் செயல் முறைகளில் ஒன்றான நாள்பட்ட அழற்சி யைக் குறிவைக்க, ஒரு புதிய இரத்த வடிகட்டுதல் நுட்பத்தைப் பயன்படுத்தி, அல்சைமர் நோய்க்கான தனது வகையான முதல் சிகிச்சை உத்தி என்று ரஷ்ய மருத்துவர்கள் ஒன்றை உருவாக்கிச் சோதித்துள்ளனர்.

அல்சைமர் என்பது படிப்படியாக மோசமடையும் ஒரு மூளை நோயாகும், மேலும் இது மறதி நோயின் மிகவும் பொதுவான வடிவமாகும். இது நினைவாற்றல், சிந்தனை மற்றும் பிற அறிவாற்றல் திறன்களைப் படிப்படியாக அழித்து, இறுதியில் நோயாளிகளை அன்றாடப் பணிகளைச் சுயமாகச் செய்ய இயலாத நிலைக்குத் தள்ளுகிறது.

செவ்வாய்க்கிழமை(18) வெளியிடப்பட்ட ஒரு செய்திக்குறிப்பின்படி, ரஷ்யாவின் பழமையான மற்றும் முன்னணி மருத்துவப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான மாஸ்

தொடர்ச்சி: பக்கம் 13

## அமெரிக்காவின் கடன் 40 ட்ரில்லியன் டொலரைத் கடந்தது




அமெரிக்காவின் மொத்தக் கடன் முதல் முறையாக 40 ட்ரில்லியன் டொலர் அளவைக் கடந்துள்ளது; அரசின் வருவாயை விடச் செலவுகள் அதிகமாக இருப்பதால், நாடு ஒரு நிதி நெருக்கடியைச் சந்திக்கக்கூடும் என்ற கவலை எழுந்துள் ளது.

புதன்கிழமை(19) வெளியிடப்பட்ட கருவூலத் துறையின் தரவுகளின்படி, ஜனவரி 2017-ல் டொனால்ட் ட்ரம்ப் முதல் முறையாக அதிபராகப் பதவியேற்றபோது நாட்டின் கடன் 19.95 டிரில்லியன் டாலராக இருந்தது; அதன்பிறகு அந்தக் கடன் அளவு இருமடங்காக அதிகரித்துள்ளது.

மார்ச் 2020-ல் பெருந்தொற்றாக அறிவிக்கப்பட்ட கோவிட்-19 பரவலுக்குப் பிந்தைய இரண்டு ஆண்டுகளில் இந்த அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்கு ஏற்பட்டது. ட்ரம்ப் மற்றும் அவருக்குப் பின் வந்த அதிபர் ஜோ பைடன் ஆகிய இருவரின் நிர்வாகங்களின் கீழும், பெருந்தொற்றுக்கான நடவடிக்கைகளுக்காக அரசு பெருமளவில் கடன் வாங்கியது.

ஜனவரி 2025-ல் ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்றதிலிருந்து, அமெரிக் காவின் கடன் சுமை 3.8 2 ட்ரில்லியன் டொலர் அதிகரித்துள்ளது; இதன் மூலம் அவரது இரண்டு பதவிக்காலங்களிலும் சேர்த்து மொத்தக் கடன் 11.6 ட்ரில்லியன் டொலர் அளவுக்கு

தொடர்ச்சி: பக்கம் 15

## அரச வைத்தியசாலை ஊழியர்கள் அணியவேண்டியது சீரூடையா? மத உடையா?

-பா.அரியநேத்திரன்-

கல்முனை வடக்கு வைத்தியசாலையில் கடந்த 2026 ஆகஸ்ட் 06ல் சுகாதார அமைச்சினால் புதிதாக பணியாளர்களாக நியமனம் பெற்ற 09, முஸ்லிம் பெண் சுகாதார பணியாளர்கள் நடைமுறையில் உள்ள சீருடையை மீறி முஸ்லிம் மத கலாசார உடை அணிந்து கடமைக்கு சென்றதும் அந்த ஆடையை மாற்றி சுற்றுநிருபத்தில் உள்ளவாறு சீருடை அணிய கல்முனை வடக்கு வைத்தியசாலை நிர்வாகம் பணித்தமையை ஏற்றுக்கொண்ட அந்த 09 இஸ்லாமிய பெண்களும் பின்னர் சிலருடைய தூண்டுதலால் சீருடை அணியாமல் மீண்டும் அதே கலாசார உடை அணிந்தமையால் ஏற்பட்ட பிரச்சனையானது கவன ஈர்ப்பு போராட்டங்கள் சமூக வலைத்தளங்களின் ஏட்டிக்கு போட்டியான விமர்சனங்கள் என தொடர்ந்து வரும் நிலையில் அம்பாறை மாவட்ட இலங்கை தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடி உடனடியாக அந்த 09, பணியாளர்களும் கல்முனை அஷ்ரப் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர். இந்த சம்பவம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.



ஆனால் மழை விட்டாலும் தூவானம் குறையவில்லை என்ற விதமாக இப்போது அரசியல் பிரச்சனையாக மாறி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள். எதிர்கட்சி தலைவர் சஜீத்பிரமதாசா, ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவர் றவூப் ஹக்கீம் உட்பட சில அரசியல் வாதிகள் அந்த பணியாளர்களை மீண்டும் அதே மத கலாசார உடையுடன் கல்முனை வடக்கு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யவேண்டும் என நாடாளுமன்றத்திலும் உரையாற்றி நேரத்தை வீண்டிப்பதை காணமுடிந்தது.

போதாக்குறைக்கு சில முஷ்லிம் பிரமுகர்கள் கொழும்பில் சுகாதார அமைச்சுக்கு சென்று தங்களுடைய நியாயத்தை முன்வைத்தனர். உண்மையில் எந்த முஸ்லிம் நபர்களும் சுற்று நிருபத்துக்கு மாறாக சீருடை அணிந்தது தவறு என்பதை கூற வில்லை.

சீருடை என்ற பிரச்சனையை இந்துமத பெண்கள் பொட்டு கௌரிக்காப்பு என்பவற்றுடன் ஒப்பிட்டு சில முட்டாள்தனமான கருத்தை கூறுவதையும் காணமுடிகிறது. உண்மையில் சீருடைக்கும் நெற்றியில் இடும் பொட்டுக்கும், கையில் கட்டும் நூல் காப்புக்கும் வித்தியாசம் தெரியாத அல்லது வித்தியாசம் தெரிந்தும் வேண்டுமென்றே இனவாதமான கருத்துக்களை சில முஸ்லிம் நபர்கள் வெளியிடுவது அவர்களுடைய அறிவீனமே.

கல்முனை வடக்கு வைத்தியசாலையில் புதிதாக நியமனம் பெற்ற முஸ்லிம் பெண் ஊழியர்களை சீருடை தொடர்பான விவகாரத்தில் வேறு வைத்தியசாலைக்கு இடமாற்றியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் 09 முஸ்லிம் பெண் ஊழியர்களையும் உடனடியாக அவர்கள் இருந்த இடத்திலேயே அமர்த்தி அவர்களுக்கு அவர்களின் கலாசாரத்திற்கமைய சீருடையை வழங்கி நியமனம் வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சீருடை சம்மந்தமான சுற்று நிருபத்தை மறந்து அல்லது உதாசீனம் செய்து உரையாற்றியுள்ளார்.

அப்படியானால் அந்த சுற்று நிருபம் எதற்கு அதனை இரத்துச்செய்யுங்கள் என எதிர்கட்சி தலைவர் கூறவில்லை? இதேவேளை சீருடை சம்பந்தமான சுற்றுநிருபத்தை உடனே அமுல் படுத்துமாறு கோரி, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ! வைத்தியசாலையின் நிரந்தர சேவையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுத்தனர்.

உண்மையில் இதனை விமர்சிப்பவர்கள், அல்லது கல்முனை வடக்கு வைத்தியசாலை நிர்வாகம் எடுத்த முடிவை தவறு என கூறுபவர்கள் சமூக ஊடகங்களில் தேவையற்ற தனிநபர் தாக்குதல்களையும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே வெறுப்பூட்டும் பதிவுகளை இடுபவர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் வாதிகள் மத அடையாளமென்ற போர்வையில் இலங்கையின் அரச நெறிமுறைகளை மாற்ற முயற்சிக்கும் சில முஸ்லிம் மதவாத குழுக்கள். எல்லோரும் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை அரசினால் வைத்தியசாலையில் கடமைபுரியும் பணியாளர்கள் எவ்வாறான சீருடை அணிய வேண்டும் என்ற சுற்று நிருபங்கள் ஏற்கனவே 2019.06.26 திகதிய 13/2019(1) மற்றும் 2022.09.27 திகதிய 05/2022 ஆகிய சுற்றறிக்கைகள் 2022.11.28 ஆம் திகதி அரசாங்கத்தினால் முற்றாக இரத்துச் செய்யப்பட்டு விட்டன.

தற்போது கடந்த 1989.02.01 ஆம் திகதிய 8/89 இலக்க அரச சுற்றுநிருபம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. அதன் அடிப் படையிலேயே வைத்தியசாலை நிர்வாகம் சட்டப்பூர்வமாகச் செயற் பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 05

## ஆசிரியர் தலையங்கம் | 22 ஆகஸ்ட், 2026

## இசட் அல்பா பரம்பரையினரின் கையிலேயே நாடுகளின் இறைமையுள்ளது

மீளவும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைதல் என்பது இங்கிலாந்து வாழ் இசட் பரம்பரையினரின் கோரிக்கையாகவுள்ளது. இதனை "எனது பரம்பரையினர் பிரிக்ஸ்ட் நடைபெற்றபொழுது குரலாக இருக்கவில்லை – ஆனால் பேர்ணம் இளையவர்களுக்குப் புதிய நம்பிக்கை அளித்துள்ளார் " (My Generation had no voice on Brexit but Burnham gives the young fresh hope) என்னும் தலைப்பில் பிரிக்ஸ்ட் இடம்பெற்ற பொழுது 14 வயதில் இருந்த சியரா சேர்ஜன்ட் ( Ceira Sergeant) 17.08.2026 இல் பிரித்தானியாவின் "த கார்டியன்" ஆங்கில நாளிதழுக்கு எழுதிய கட்டுரை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

"பிரிக்ஸ்ட் இப்பொழுது இளையவர்கள் எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளையும் உருவாக்கவில்லையாயினும் ஐரோப்பாவுடனான நெருக்கமான இணைவுகள் அதிக வாய்ப்புக்களை எங்களுக்குத் தந்துள்ளது" என்னும் சியரா சேர்ஜன்டின் கருத்து இசட் பரம்பரையினர் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் சுதந்திரமாக வாழ்வதை விரும்புகின்றனர் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. மூத்த தலைமுறையினர் எடுக்கின்ற முடிவுகளின் விளைவுகள் அந்நேரத்தில் தேர்தல் மூலம் தங்கள் குரலை வெளியிட இயலாத நிலையில் இருக்கும் 14 முதல் 16 வயதினரை நேரடியாகத் தாக்குகின்றது என்பது சனநாயக அரசியலில் முக்கியமாக பிரச்சினையாக இருப்பதை இவரின் கட்டுரை தெளிவாக்கியுள்ளது.

பல்வேறு காரணங்களுக்காக நடமாடும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படுகின்ற பொழுது இளையவர்களின் சுதந்திரவாழ்வுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்ற என்கின்ற எண்ணம் இன்றைய இசட் மற்றும் அல்பா பரம்பரையினரைச் சேர்ந்த இளையவர்களுக்குப் பலமாக உள்ளது. இது இளையவர்கள் அரசியலில் நேரடியாக ஆர்வமுடன் பங்குபற்றுவதில் இருந்து விலகிச்செல்வதற்கான மூலகாரணங்களில் ஒன்றாகவும் திடீரென இளையவர்கள் ஒன்று சேர்ந்து எழுந்து அரசுக்களை மாற்றவும் காரணமாகவும் உள்ளது.

தாங்கள் பிறந்த கண்டத்தில் தாங்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு ஏற்படுத்தப்படும் தடைகளை பணம் படைத்தவர்கள் இலகுவாகத் தாண்டி தங்கள் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள் ஆனால் பணபலம் குறைந்த மத்திய தர வர்க்கத்தினர் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் நடமாடும் சுதந்திர மறுப்புக்கு உள்ளாகின்றனர் என்பது இன்றைய இளைய தலைமுறையினரின் எண்ணமாகவுள்ளது.

இதற்கு ஈழத்தமிழ் இளையவர்களும் விதிவிலக்கல்ல. ஈழத்தமிழர்களின் இசட் மற்றம் அல்பா பரம்பரை இளையவர்கள் உடைய குரல் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர் தாயகத்திலும் ஈழத்தமிழர் புலம்பதிந்து வாழும் நாடுகளிலும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களால் ஈழத்தமிழின அரசியல் எதிர்காலம் பொருளாதார முயற்சிகள் குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதன் விளைவுகளை தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அனுபவிக்க வேண்டிய நிலை ஈழத்தமிழரின் இசட் மற்றும் அல்பா பரம்பரையினருக்கு உள்ளது. இது இந்த இளையவர்களுக்குத் தங்கள் சமுகத்தின் மேலான வெறுப்பாகவும் பிறசமுகங்களுள் தங்களை இணைத்துக்கொள்ளும் ஆர்வமாகவும் பரிணாமமடையும் என்பது இயல்பாகவுள்ளது.

ஈழத்தமிழர்களின் இசட் மற்றும் அல்பா பரம்பரையினருக்கு ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின பரிணாம வளர்ச்சி என்பது சிறிலங்காவின் திட்டமிட்ட ஈழத்தமிழின அழிப்பு அரசியலுடன் இணைந்த கல்விமுறையால் அறியப்படாதவொன்றாக கடந்த 17 ஆண்டுகளாக மாற்றப்பட்டு வருகிறது. இதனால் தங்கள் சமகால வரலாற்றின் உண்மைத்தன்மையைக் கூட அறிய இயலாத நிலையில் தாயகத்தில் உள்ள ஈழத்தமிழின இசட் மற்றும் அல்பா பரம்பரையினர் உள்ளனர்.

தேசங்கடந்துறை புலம்பெயர்ந்து புலம்பதிந்து வாழும் உலக ஈழத்தமிழினமாகவுள்ளவர்களும் தங்களிடை பல்குழுக்களை உருவாக்கி உலக இனமாகவுள்ள ஈழத்தமிழினத்தின் தேசிய ஒருமைப்பாட்டைக் கடந்த பதினேழு ஆண்டுகளாக சிதைத்து வருவதினால் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழராலும் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழரின் இசட் மற்றும் அல்பா பரம்பரையினருக்கு அவர்களின் தேசியத்தின் (Nationality) வரலாற்றை அறியப்படுத்த இயலாத நிலை தொடர்கிறது.

புலம்பதிந்து வாழும் மேற்குலகநாடுகளில் அரசியல் புகலிடம் பெற்றவர்கள் தங்களின் புகலிடக் கோரிக்கைக்கான அரசியல் காரணங்களை மனிதாயத் தேவைகளைத் தங்களுடன் வாழும் மற்றைய மக்களுக்கு எடுத்துரைக்கவும் அரசியல் புகலிடம் பெற்றவர்கள் தாம் வாழும் நாடுகளின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக வளர்ச்சிகளுக்கு அளித்து வரும் பங்களிப்புக்களை விளக்கவும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமை மாதம் யூலை என்பதைக்கூட மறந்து கனடாவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் வாழும் ஈழத்தமிழர்கள் அர்த்தமற்ற முறையில் சனவரி மாதத்தை தைப்பொங்கலை மையமாகவைத்து கொண்டாடத் தொடங்கி தங்களுடைய ஈழத்தமிழின வரலாற்றை புகலிட வாழ்வின் காரணத்தை புகலிட நாடுகளுக்கு அளித்துள்ள அளப்பரிய கல்வி பொருளாதார பொதுச்சேவைப் பங்களிப்புக்களை மரபுரிமை மாத முறைமை வழி வெளிப்படுத்தித் தமது ஈழத்தமிழினத்துக்கான பெரும் சமுகத்தினரின் சமத்துவத்தை மதிப்பை பெறும் சந்தர்ப்பத்தை இழந்துவருகின்றனர்.

ஈழத்தமிழர்களின் பல படைப்பாளிகள் கவிஞர்கள் கலைஞர்கள் தங்களின் தாயகத்தின் வரலாற்றை தங்களின் மக்களின் கலைத்துவ இலக்கிய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை வெளிக்கொண்டுவராமல் தமிழகப்பண்பாட்டுக்குள் எல்லாவற்றையும் அடக்க முயல்வதே ஈழத்தமிழர் தேசிய பிரச்சினை தங்களின் சொந்த மண்ணை மீட்கும் ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதை உலகால் புரிந்து கொள்ளவியலாத நிலையை உருவாக்கி வருகிறது.

கற்றோர் குழாத்து சனநாயகத்தின் elite democracy மூலம் பிரித்தானியக்காலனித்துவ அரசாங்கம் தொடக்கி வைத்த கல்வி முறைகளும் அரசியல் முறைமைகளும் ஈழத்தமிழர்களுக்கு பிரித்தானிய காலனித்துவம் விலகிய பின்னரும் இன்று வரை அவர்கள் அறிவாக அணுகுமுறையாக உள்ளது. ஈழத்தமிழர்களுக்கான கல்விமுறை ஈழத்தமிழர்களுக்கான அரசியல் அணுகுமுறை அரசியல் பண்பாடு பொருளாதார திட்டமிடல்கள் மண்ணினதும் மக்களினதும் பிரிக்கவியலாத இறைமையுணர்வுடன் தன்னாட்சியை வலுப்படுத்தத் தக்க வகையில் வளர்க்கப்படுவதற்கான பள்ளிச் சிந்தனைகள் கட்டமைக்கப்பட வேண்டிய காலமிது. அவ்வாறே இசட் அல்பா பரம்பரையினரின் விளையாட்டுக்குள் இசைகள் நடனங்கள் அனைத்துலக போக்குக்கு ஏற்ப இவை வழியாக வருமானம் வரக்கூடிய முறையில் துறைசார் வளர்ச்சிகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

மரபு என்பது நமது பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகளுக்குக் காலத்துக்கு ஏற்ற விளக்கம் கொடுத்து ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது என்பது தொல்காப்பியத்துக்கு உரையெழுதிய இளம்பூரணாரின் தெளிவான விளக்கம். எனவே மரபு என்ற பெயரிலும் அறம் தொன்மைப்பண்பாடு என்னும் பெயரிலும் பல்லாயிரம் ஆண்டுக்கு முந்தியவற்றை எல்லாம் இன்றைய இசட் அல்பா சமுகத்தின் மேல் திணிக்காது அறிவார்ந்த அணுகுமுறையில் தமிழ் இலக்கிய இலக்கணங்களும் தமிழர் நம்பிக்கைகளும் பண்பாடும் மீள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். வாழ்க்கைத் தெரிவாக இருந்தாலும் சரி வாழ்வியல் தெரிவாக இருந்தாலும் சரி இசட் அல்பா பரம்பரையினருக்கு அவர்கள் தெரிவாக அமைய அனுமதித்து இவைகள் குறித்த அனுபவப் பகிர்வுகள் செய்யப்பட்டு நெறிப்படுத்தல் செய்யப்பட வேண்டுமே தவிர திணிப்பு வளர்ப்பு முறைக் கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

இதற்கான ஆரம்பப் புள்ளியாக 2024ம் ஆண்டின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பதிப்பாக வெளியாகிய பேராசிரியர் அலெக்ஸ் கிரீனின் நூலான "அரசியல் சமுகமாக அரசுரிமை, அனைத்துலக சட்டம், புதிய நாடுகளின் உதயம் (Statehood as Political Community, Internationa Law and the Emergence of New States) என்ற ஆய்வின் அடிப்படையில் ஹொங்ஹொங்கின் சீனப்பல்கைலகழகத்தில் (Chinese University of Hong Kong) முனைவர் பட்டத்தின் பின்னான ஆய்வுக்காக "இலங்கையில் ஒரு சுதந்திர தமிழ் அரசை உருவாக்குவது தொடர்பான சட்ட மற்றும் அரசியல் கேள்விகளை ஆராய்வதற்கான ஆய்வாளர் ஒருவருக்கான அழைப்பு அமைந்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் மூலம் பேராசியர் அலெக்ஸ் கிரீனின் நெறிப்படுத்தலில் அமையவுள்ள இந்த முனைவர் பட்டப்பின் ஆய்வு ஒரு தனித்துவமான தமிழீழ அரசை ஆயுதமேந்திய பிரிவினை வாதத்தின் எச்சமாக மட்டும் பார்க்காமல் அதனை அரசுரிமை சார்ந்த கேள்வியாக ஆராய்வதற்கான ஆய்வு ஆராய்ச்சிக்கு வழிவகுக்குமென்று இதற்கான கட்டுரையை வெளியிட்ட ஶ்ரீலங்கா கார்டியன் தெரிவித்திருப்பதாக கட்டுரையையும் வெளியிட்டு செய்தியை தனது 21.08. 2026 இன் தலைப்புச் செய்தியாகவுமாக்கிய "ஈழநாடு" நாளிதழ் தகவல் தந்துள்ளது.

இதற்கு உழைத்த 'நாடுகடந்த அரசாங்கத்தினரைப்' பாராட்டுவதுடன் தகுந்த முனைவர் பட்ட பின் ஆய்வாளர் கிடைப்பதற்கும் இத்தகைய ஆய்வுகள் உலகெங்கும் உருவாவதற்கும் உலக ஈழத்தமிழினமாக புலம் பதிந்துவாழும் தமிழர்களும் தாயக ஈழத்தமிழர்களும் இணைந்து செயற்பட வேண்டுமென்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

மனித உரிமைகள் மனிதாயத்தைப் போற்றுதல் என்கின்ற இரு வழிகளிலேயே சமகாலத்தில் இசட் அல்பா சமுகத்தினரை பொதுநன்மை (Common Goods) குறித்து வழிப்படுத்தினாலே அவர்கள் செயற்திட்டங்களில் இணைவர் என்பது அதிமுக்கிய விடயம் என்பதையும் இந்நேரத்தில் இலக்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

ஆசிரியர்




இந்து சமுத்திர பிராந்தியத்தின் மூலோபாய மையப் புள்ளியாக விளங்கும் இலங்கைத் தீவு, உலகளாவிய வல்லரசுகளின் பாதுகாப்பு, வர்த்தக மற்றும் பூகோள அரசியல் நகர்வுகளின் முக்கியமான தளமாக மீண்டும் மாறியுள்ளது.

அண்மையில் இந்து சமுத்திரப்பிராந்தியத்துக்கான அவுஸ்திரேலிய விசேட பிரதிநிதியின் வருகை, உயர் தொழில்நுட்ப ட்ரோன்கள் கையளிப்பு, அமெரிக்காவுடனான பிரசித்திபெறாத இரகசியப் பயிற்சிகள், சீனாவின் தரப்பிலிருந்து வழங்கப்பட்ட ட்ரோன்கள் மற்றும், துறைமுகங்களை மையப்படுத்திய உலக வங்கியின் வர்த்தக ஆய்வுகள், அமெரிக்க உயரதிகாரிகளின் துறைமுக விஜயங்கள் மற்றும் அடுத்த மாதம் எதிர்பார்க்கப்படும் இந்திய பாதுகாப்பு அமைச்சரின் வருகை ஆகியவை வெறும் இருதரப்பு உறவுகளுக்கு அப்பாற்பட்டு, ஒரு நுட்பமான கடல்சார் மற்றும் பாதுகாப்பு இராஜதந்திரக் களத்தை வெளிப்படுத்துகின்றன. இவற்றுடன் சர்வதேச அளவில் வளர்ந்து வரும் துருக்கியின் ஆசியாவை நோக்கிய 'Asia Anew' கொள்கை மற்றும் அதன் பாதுகாப்பு நகர்வுகளும் இணையும் போது, இலங்கை எவ்வாறு உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியைத் தனது தேசிய நலனுக்குச் சாதகமாகக் கையாளப் போகின்றது என்ற பெரும் கேள்வி எழுகின்றது.



கடல்சார் பாதுகாப்பைப் பொறுத்தவரை, அவுஸ்திரேலியாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. அவுஸ்திரேலியாவின் இந்திய சமுத்திர பிராந்திய விவகாரங்களுக்கான விசேட பிரதிநிதி டிம் வாட்ஸ் அவர்களின் இலங்கை வருகையின் போதும், அவுஸ்திரேலிய எல்லைப் படை மற்றும் கடல்சார் எல்லைக் கட்டளையின் தளபதி ரியர் அட்மிரல் பிரெட் சொன்டர் அவர்களின் வழிநடத்தலிலும் இலங்கை கடலோரப் பாதுகாப்புப் படைத் தலைவர் ரியர் அட்மிரல் ரொஹான் ஜோசப்பிடம் 12 க்கும் மேற்பட்ட அதிநவீன கண்காணிப்பு ட்ரோன்கள் மற்றும் உபகரணங்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பது அதன் தேசிய பாதுகாப்பிற்கு அவசியமாகும்.

இதேவேளை, அமெரிக்க கடற்படையும் இலங்கை கடற்படையும் இணைந்து திருகோணமலையை மையப் படுத்திய கடற்பரப்புகளில் CARAT 2026 போன்ற விளம்பரப் படுத்தப்படாத கூட்டுப் பயிற்சிகளையும், நடத்தி வருகின்றன. இவற்றுக்கு அமெரிக்கத் தரப்பில் அமெரிக்க கடற்படையின் P-8A Poseidon போன்ற கண்காணிப்பு விமானங்கள் பயன்படுத்தப்பட்டு கடல்சார் கண்காணிப்புத் திறன் பயிற்றுவிக்கப்படுகிறது. இதன் பின்னணியில், அமெரிக்காவின் 'இந்தோ-பசுபிக் மூலோபாயத்திற்கு' கொழும்பை ஒரு முக்கிய பங்காளியாக்கும் நுட்பமான பாதுகாப்பு இராஜதந்திரம் அடங்கியுள்ளது.

மேற்கத்திய நாடுகளின் இந்த ஆதிக்க நகர்வுகளுக்குப் போட்டியாக, சீனா தனது இராணுவ மற்றும் வர்த்தக செல்வாக்கை இலங்கை மண்ணில் தீவிரமாகச் சமநிலைப்படுத்தி வருகின்றது.

சீனா தரப்பிலிருந்து, சீன நிறுவனமான நுர்யபெ மூலம் இலங்கையில் பயணிகள் மற்றும் வான்வழிப் போக்குவரத்து ட்ரோன் சேவைக்கான முன்னோடித் திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ருவன் கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

கொழும்புதுறைமுகநகரம் மற்றும் தெற்குகடலோரப் பகுதிகளை இணைக்கும் இத்திட்டம் வர்த்தக நோக்கத்தைக் கொண்டிருந்தாலும், சீன தொழில்நுட்பங்களின் நுழைவு மேற்கத்திய நாடுகளுக்கொரு சவாலாகும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு எடுத்து வைத்துள்ள சீனா, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தையும் இயக்கி வரும் சூழலில், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் துறையிலும் தனது கால்தடத்தை பதிப்பது, இந்திய சமுத்திரத்தில் அதன் மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி திட்டத்தை (பி.ஆர்.ஐ) மேலும் உறுதிப்படுத்துகிறது.

இதேநேரம், பொருளாதார மற்றும் துறைமுக உள்கட்டமைப்பு தளத்தில், உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையின் பிரதான துறைமுகங்களின் செயற்பாட்டுத் திறன் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இதற்கு முன்னதாக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் உயரதிகாரிகள் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கொழும்பு துறைமுகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் சுமார் 553 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து வருகிறது. இது சீனா தனது கட்டுப்பாடு வைத்துள்ள கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்திற்குப் போட்டியாக, இந்தியாவின் அதானி குழுமத்துடன் இணைந்து அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் இலங்கைத் துறைமுகத்தில் நிலைநிறுத்தியுள்ள பொருளாதார-மூலோபாய எதிர்வினையாகும்.

இவற்றுக்கு மத்தியில், இலங்கையின் மிக நெருங்கிய அண்டை நாடான இந்தியாவின் பாதுகாப்பு கவலைகள் இக்களத்தில் மிக முக்கியமான தீர்மானிக்கும் சக்தியாகும். அடுத்த மாதம் (செப்டெம்பர் 2026) இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்திற்கான ஏற்பாடுகளை இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த ஆகியோர் சந்தித்து இறுதி செய்துள்ளனர்.

இந்தியாவின் 'அண்டை நாட்டிற்கு முதலிடம்' கொள்கையின் கீழ், தனது தெற்கு எல்லையில் சீனாவோ அல்லது மேற்கத்திய நாடுகளோ இராணுவ மையம் அமைப்பதை இந்தியா தனக்கான அச்சுறுத்தலாகவே கருதுகிறது.

ராஜ்நாத் சிங்கின் இந்த வருகையின் போது முக்கோண பாதுகாப்பு கூட்டாண்மை, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்தி மற்றும் கடல்சார் விழிப்புணர்வு தகவல் பகிர்வு குறித்த உடன்பாடுகள் எட்டப்படலாம் எனக் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், சர்வதேச அளவில் தனது 'ஆசியா மீண்டும்' என்ற வெளியுறவுக் கொள்கையின் மூலம் தெற்காசியாவில் செல்வாக்கை விரிவுபடுத்தி வரும் துருக்கியின் புதிய கரிசனைகளும் கவனிக்கத்தக்கவை. துருக்கியின் ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகனின் வெளியுறவு மூலோபாயத்தின் கீழ், துருக்கி தனது அதிநவீன 'Bayraktar'ட்ரோன் தொழில்நுட்பம், பாதுகாப்பு உற்பத்தி மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு மூலம் இலங்கையுடன் புதிய உறவை ஏற்படுத்த முயல்கிறது.

விதுரன்

இந்திய சமுத்திர பிராந்தியத்தில் ஒரு புதிய மூலோபாய சக்தியாக உருவெடுக்க விரும்பும் துருக்கியின் இந்த நகர்வு, இலங்கையின் இராஜதந்திர களத்திற்குப் புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

இத்தகைய சிக்கலான சூழலில், இலங்கை தனது 'கடல்சார் மூலோபாய இராஜதந்திரம்;' மற்றும் 'பாதுகாப்பு இராஜதந்திரம்' என்பவற்றை மிக எச்சரிக்கையுடன் கையாள வேண்டியுள்ளது.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு அனைத்து நாடுகளின் நிதியுதவியும் முதலீடுகளும் தேவைப்படும் நிலையில், எந்தவொரு வல்லரசுப் பக்கமும் சாய்ந்துவிடாமல் நடுநிலைமையை வைத்துக்கொள்வதென்பது மிகச் சவாலான விடயமாகின்றது.





இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிப்படைத் தன்மை கொண்ட கடல்சார் கொள்கை முக்கியமானது. அதாவது, இலங்கைக் கடற்பரப்பில் நடைபெறும் கூட்டுப் பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு உதவிகள் குறித்த வெளிப்படைத்தன்மையை பேணுவதன் மூலம், இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையிலான பரஸ்பர சந்தேகங்களைக் குறைக்கலாம்.

அடுத்ததாக துறைமுகங்களின் வர்த்தக மயமாக்குதல் அவசியமாகின்றது. கொழும்பு, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் வர்த்தக நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதையும், எந்தவொரு நாட்டின் இராணுவத் தளமாக மாற அனுமதிக்கப்படாது என்பதையும் இலங்கை உறுதியாகப் பிரகடனம் செய்ய வேண்டும்.

வல்லரசுச் சமநிலை பேணல் என்பது மிகப் பெரிய கடியமான விடயம் என்றாலும் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிடமிருந்து கண்காணிப்புத் தொழில்நுட்பங்களையும், சீனாவிடமிருந்து உள்கட்டமைப்பு முதலீடுகளையும், இந்தியாவுடன் இணைந்து பிராந்திய பாதுகாப்பையும் பேணி, துருக்கி போன்ற புதிய சக்திகளுடன் பாதுகாப்பு வர்த்தக உறவை ஏற்படுத்துவதன் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட இராஜதந்திரத்தை இலங்கை தொடரலாம்.

ஆனால் தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வி, மேற்படி நகர்வுகளின் கூரிய உணர்ந்திறனை உணர்ந்து தீர்மானங்களை எடுக்கும் அரசியல் இயலுமை நாட்டின் தலைமைக்கு காணப்படுகின்றதா என்பதாகும்.




## யாழ். ஆலயத் திருவிழாவில் ... தொடர்ச்சி...

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 46 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் 60 பேரும், ஆண்கள் 50க்கும் மேற்பட்டோரும் அடங்குகின்றனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தாமதிக்காமல் உடனடியாக அருகில் உள்ள வைத்திய சாலைகளை நாடுமாறு பிரதேச சபையினரால் ஒலி பெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என் றும், சிகிச்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியர் சத்யமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஆலயத்திற்கு மின் இணைப்பு களை வழங்கியதாகக் கூறப்படும் சிலர் இளவாலை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று நவாலி அந்திரான் பகுதியில் நடைபெற்ற ஆலயத் திருவிழாவிலும் வாணவேடிக்கையால் பனை மரம் மற்றும் பாதுகாப்பு வேலி தீப்பற்றி எரிந்து அனர்த்தம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித் துள்ள யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஆலய நிர்வாகங்களும் மதகுருமார்களும் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், தேவையற்ற ஒலிபெருக்கி பயன்பாடு, அதிகளவிலான பட்டாசு வெடித்தல் மற்றும் லேசர் ஒளிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## அரசவைத்தியசாலை... தொடர்ச்சி...

சுற்று நிருப நடைமுறையை விளங்கிக்கொள்ளாத எதிர் கட்சிதலைவர் சஜீத் பிரமதாசா தொடக்கம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், சீருடை சுற்று நிருபத்துக்கு மாறாக குறுகிய அரசியலுக்காக பேசுவதையே காணலாம்.

இவ்வாறு விதண்டாவாத கருத்துக்களை கூறுபவர் கள் சீருடை சம்மந்தமான சுற்று நிருபத்தை மீளப்பெற்று அல்லது அதனை மாற்றி ஒவ்வொரு மதத்தவரும் அவர்கள் விரும்பிய மத அடையாள ஆடைகளை அணியலாம் என சுற்று நிருபத்தை திருத்தம் செய்வதற்கு சுகாதார அமைச் சருக்கு அழுத்தம் கொடுப்பதைவிட்டு கல்முனை வடக்கு வைத்தியசாலை நிர்வாகத்தை பிழையாக விமர்சிப்பதை நிறுத்துவது நல்லது.

சீருடை சம்மந்தமாக நடைமுறையில் ஒரு சுற்று நிருபம் இருக்கத்தக்கதாய் அதனை மீறி முஸ்லிம் மதத்தவர் கள் அவர்களுடைய மத கலாசார உடை அணியமுடியும் எனில் ஏன் ஏனைய பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத் தோலிக்க மதங்களை பின்பற்றுபவர்கள் அவர்களுடைய மத அடையாள உடைகளை அணிய அனுமதிக்க முடியாது, சிந்திக்கவேண்டியது அல்லவா? ஒவ்வொரு மதத்தவர்களும் அவர்கள் விரும்பிய உடை அணிவதென்றால் சீருடை எதற்கு?

சீருடை என்பதற்கான வரைவிலக்கணம் உண்டு சீருடை என்பது பொதுவான உடையே அன்றி அது எந்த மதத்தவர்களும் அவர்கள் விரும்பியபடி மாற்றும் வினோத உடை இல்லை என்பதை சரியாக விளங்கிக்கொண்டால் எவரும் எந்த சச்சரவுகளும் செய்யவேண்டியதில்லை

இனவாதம், மத வாதம், தனிமனித விமர்சனம், வைத்தியசாலை நிர்வாகத்தை விமர்சனம் செய்யும் சகலரும் முதலில் சீருடை சுற்றுநிருபத்தை மாற்றுவதற்காக பேசுவதே சரி அதைவிட்டு வீணான விமர்சனங்களை தவிர்பது நல்லது.

## வடக்கு – கிழக்குக் காணி ... தொடர்ச்சி...

தேவையை முப்படையினர் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேநேரம், மக்களின் பக்கமிருந்து சிந்தித்து விடுவிக்கக்கூடிய அதிகபட்ச காணிகளை விரைவாக விடுவிக்க இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனவும் காணிகளை ஒப்படைப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல், அப்பகுதி மக்களின் வாழ்வாதார வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், காணி உரிமையாளர்கள் உயர் உற்பத்தித் திறனைப் பெற ஏதுவாக, நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய விவசாயத் திட்டங்களை அறிமுகப் படுத்துமாறு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு ஜனாதி பதி பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச் சர் ராமலிங்கம் சந்திரசேகர், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தா மற்றும் முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.



# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வெட்டி வீழ்த்த ஜே.ஆர். கையாண்ட ஆகஸ்ட் 1977 இனப்படுகொலை!

பா.அரியநேத்திரன்

1977,ஆகஸ்ட்,15, தொடக்கம் 1977, ஆகஸ்ட்,22, வரை நடந்த இனப்படுகொலைகளுக்கு இன்று 2026, ஆகஸ்ட் 49, ம் ஆண்டு நினைவு கூர்ந்து இந்த கட்டுரை இடம்பெறுகிறது.

1976,மே,14, ல் தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் சுதந்திர தமிழீழப்பிரகடனத்தை நிறைவேற்றியபின்னர் அவர் 1977, ஏப்ரல்,26, ல் இயற்கை எய்தினார்.

தந்தை செல்வா மரணித்த பின்னர் 1977, யூலை,21, ல் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வடகிழக்கில் 18, தேர்தல் தொகுதியில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கான ஆணையை தமிழ்மக்கள் வழங்கியதுடன் இலங்கையில் முதன் முதலாக தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிர்கட்சி தலைவர் பதவி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு கிடைத்ததுடன் இலங்கையில் இரண்டாவது கட்சியாக இடம்பிடித்தது.

1977 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய வாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப் பகுதிகளில் தனிநாடு கோரிக்கையை முன்வைத்து பெரு வெற்றி பெற்றதை பொறுத்துக்கொள்ளாத இனவாத ஐக்கிய தேசிய கட்சியின் பிரதமர் ஜே ஆர் ஜெயவர்தனவின் தூண்டுதலால் தமிழ்ப்பகுதிகளுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழருக்கு எதிராக இனவன்முறைகள், 1977, ஆகஸ்ட்,15, தொடக்கம் 1977, ஆகஸ் ஒஉட்,22, வரை இனப் படுகொலைகள் இடம்பெற்றன.

அனுராதபுரம், கொழும்பு, இரத்தினபுர, களுத்துரை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொன்ராகலை, பதுளை, கண்டி, குருநாகல், கேகாலை, மாத்தளை, நுவரேலியா, திருகோணமலை, மட்டக்களப்பு , மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய 20, மாவட்டங்கள் உட்பட பல பகுதிகளிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர், படுகொலை செய்யப்பட்டனர், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த வன்முறையில் ஆயிரக்கணக்கானோர் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 1500க்கு மேற்பட்ட தமிழர்கள் இனப்படுகொலை செய்யப் பட்டனர். 10000, க்கு மேற்பட்ட தமிழர்கள் படு காயம் அடைந் தனர். 80000, க்கு மேற்பட்ட தமிழர்கள் சொத்துக்களை இழந்தனர். 70, கோடிக்கு மேல் தமிழர்களின் சொத்துக்கள் சேதமடைந்ததாக அப்போது கூறப்பட்டது.

1977, தேர்தல் பிரசாரத்தின்போது சர்வ கட்சி மாநாட்டின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜே.ஆர்.ஜெயவர்தன இத்தேர்தலில் பிரசாரம் செய்ததால் தெற்கில் தமிழர்களின் வாக்குகள் ஐக்கிய தேசிய கட்சிக்கே பெருமளவு கிடைத்தன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 08 ஆசனங்களையே பெற்றது.

தமிழர் விடுதலை கூட்டணி 18, ஆசனங்களுடன் இரண்டாவது கட்சியாக எதிர்கட்சி பதவி கிடைத்தது. 1977 ஆகஸ்ட் 12, 13 ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் புற்றுநோய் மருத்துவமனை கட்டட நிதிக்காக புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பொலி ஸார் சிலர் தகராறில் ஈடுபட்டதில் இரு பொலிஸார் காய மடைந்தனர்.

திட்டமிட்டு குழப்ப வந்த பொலிசார் தாம் கொள் ளைச் சந்தேக நபர்களை கைது செய்யவே அவர்கள் அங்கு வந்ததாக யாழ் பொலிஷ பொறுப்பதிகாரி குணசேகர கூறினார். அதனைத்தொடர்ந்து 1977 ஆகஸ்ட் 15 பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகள், கான்ஸ்டபிள்கள் கூட்டத்தின் பின்னர், புங்குடுதீவுக்குச் செல்வதாக கடமை புத்தகத்தில் எழுதிவிட்டு நகருக்குச் சென்று தீ மூட்டினர் என கான்ஸ்டபிள் சதானந்தபிள்ளை கூறியிருந்தார்.

அத்துடன் ஏ.எஸ்.பி. நூர்தீன் ஜீப்பில் சென்று 'நாய்களை சுடுங்கள்' என கத்தியதாக ஒருவர் கூறினார். சிங்கள பொலிஸார் சோர்ட்ஸ், பெனியன் இலக்கமின்றி சீருடையில் பொல்லுகள், தடிகள், துவக்குகளுடன் நகரின் வர்த்தக நிலையங்களை பழைய சந்தையை டயர்கள் மூலம் எரித்தனர் மதுபான கடைகளை உடைத்து மது அருந்தினர். யாழ். நகரமே போர்க்களமானது. எங்கும் புகை மண்டலமாக காட்சியளித்து.

இந்த கலவரத்தில் பொதுமக்கள் தாக்கப்பட்டு படு காயமடைந்தனர். துப்பாக்கிச்சூட்டில் சிலர் உயிரிழந்தனர். சைக்கிளில் சென்றவர்களை வழிமறித்து, சைக்கிளை தூக்கிச் செல்லும்படி கூறி தாக்கினர். கோட்டை அருகில் வந்தவர்களை குளத்தில் தூக்கிப் போட்டனர். பொலிஸ் நிலையத்தில் இருந்தும் கற்களை வீசினர்.

மக்கள் பாதுகாப்பு தேடி மருத்துவமனை போன்ற இடங்களில் தஞ்சமடைந்தனர். பொலிஸாரின் அத்துமீறல் களை நேரில் கண்டதாக சிங்களவரான யாழ். சுகாதார பணிப்பாளர் மருத்துவர் திசநாயக்க 1977,ஆகஸ்ட் ,17 ,ல் யாழ்ப்பாண கச்சேரியில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்தில் நடந்த உண்மைகளை அப்போது கூறினார்.

இந்த கலவரத்தை பற்றி 1958ல் நடந்த கலவரங்களை விட மோசமாகி நாடு முழுவதும் பரவும் என அப்போது வட பிராந்திய பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய அனா செனவிரட்ன (ஜே.ஆரின் மருமகன்) எதிர்கட்சி தலைவர் அ.அமிர்தலிங்கத்திடம் கூறியிருந்தார்.

1977, ஆகஸ்ட்,16,ல், யாழ். பொலிஸ் நிலையத்தில் இருந்து தலைமையகத்துக்கு தவறான செய்தி பரப்பட் டது "நாகவிகாரை மீது தாக்குதல் நடந்ததாகவும் 04 இ.போ.ச பஸ்கள் எரிப்பு" என்ற தவறான வானொலி தகவல் அனுப்பப்பட்டதால் தமிழர்களுக்கு எதிரானவன் முறைகள் தீவிரமாக பரவ காரணமானது. எனினும், இத்தகவல் தவறா னது என பின்னரே தலைமையகத்துக்கு அறிவிக் கப்பட்டது.



1977,ஆகஸ்ட் 16ல் நகரை பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட காரில் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர் தலிங்கம், வி.யோகேஸ்வரன் எம்.பி. ஆகியோரை 30 பொலி ஸார் துவக்குமுனையில் மிரட்டினர். பொறுப்பதிகாரி குண சேகர 'சுட வேண்டாம், போகவிடுங்கள்' என கத்தினார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நூர்தீன் முன்பாக இரு பொலிஸார் அமிர்தலிங்கத்தை துப்பாக்கியால் தாக்கினர். 04 பொலிஸார் மேல் நோக்கி சுட்டனர். யாழ். மேலதிக அரச அதிபர் ஏ.ஜோசப் வந்தபோதும் 'ஹேண்ட்ஸ்அப்' என்று கூறி மிரட்டினர். பலாலி இராணுவ பவுஸர்கள் மூலம் தீயினை அணைக்க அவர் ஏற்பாடு செய்தார்.

எதிர்கட்சி தலைவர் அமிர்தலிங்கம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் வீரப்பிட்டியவுக்கும் பிரதமர் ஜே.ஆருக்கும் முறையிட்டுத் தடுக்குமாறு கோரினார் ஜே ஆர் ஜெயவர்தன அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

1977,ஆகஸ்ட்,17 இரவு அனுராதபுரத்தில் கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய இரு தபால் ரயில்களில் பயணம் செய்த தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டனர். அனுராதபுரத்தில் பரம்பரையாக வாழ்ந்த தமிழர்களும் கூட வெளியேறினார்கள். அங்கு பணியாற்றிய தமிழ் அரச ஊழியர்கள் மற்றும் மருத்துவர்களும் கூட தாக்கப்பட்டு பலர் உயிரிழந்தனர். தமிழர்களின் கடைகள், வீடுகள் கொள்ளையிடப்பட்டு வண்டில்களில் எடுத்துச்செல்லப்பட்டன.

அந்த தாக்குதல் இடம்பெற்ற போது அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் இரு அமைச்சர்கள் இருந்தததாக அப்போதைய சுகாதார அத்தியட்சகர் விஜயவர்தன "லங்கா கார்டியன்" பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

அந்நாட்களில் அனுராதபுரம் பொலிஸ் அத்தியட் சகர் லியனகேயிடம், தமக்கு பாதுகாப்பு தருமாறு பல தமிழர் கள் கோரியபோது, உங்களுடைய கேணல் அமிர்தலிங் கத்திடம் கேட்கும்படி கூறினார்.

அநுராதபுரத்தில் தமிழர்களின் சடலங்கள் குவிந் தன. அவை மரண விசாரணை ஏதுமின்றி அடக்கம் செய்யப் பட்டன என மருத்துவர் அபேசிறி குணவர்த்தன அப்பொது கூறியிருந்தார்.

1977,ஆகஸ்ட் ,19,ல். யாழ்.சம்பவங்கள், பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் இளைஞர்கள் பலி. அது குறித்து எதிர்க் கட்சித்தலைவர் அ.அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கூறி னார்.

அதற்கு பதில் அளித்த இனவாத ஐக்கிய தேசிய கட்சி பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்தன நீங்கள் தனிநாடு கேட்கிறீர்கள். திருகோணமலை தலைநகர் என்கிறீர்கள். தமிழர் விடுதலை கூட்டணியும், தமிழ் இளைஞர்களுமே இவற்றுக்கு காரணம். போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம், என பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்தன கூறினார்.

1977 ஆகஸ்ட் 24ல் கொழும்பில் இருந்து மூன்று கப்பல்களில் சுமார் இரண்டாயிரம் தமிழ்மக்கள் அகதிகளாக காங்கேசன்துறைக்கு 1977 ஆகஸ்ட் 26ல் வந்தபோது உறவினர் கள் திரண்டிருந்தனர்.

முதலில் "லங்கா ராணி" கப்பல் வந்தது. கர்ப்பி ணிகளும் குழந்தைகளுடன் பெண்களும் அணிந்த ஆடை களுடன் வந்தனர். காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவரும், கப்பல் முகவருமான க.ஜெயபாலசிங்கமும், அகதிகளை சேர்க்கும் பணிக்கு பொறுப்பான (பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.சுந்தரலிங்கமும் தேவையான சகல உதவி களை செய்தனர்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் இருந்த அனுராதபுரத்தின் 80 இந்திய தமிழர்களுக்கு அதிபர் திருமதி ம. ஆனந்தக்குமாரசாமி பொதுமக்களின் உதவியுடன் நிவாரண உதவிகளை செய்தார்.

யாழ்.இந்துக்கல்லூரி, அரியாலை முகாம்களில் கேகாலை, குருநாகல், பிலியந்தல, மாகோ, பொல்காவலை பகுதிகளின் இந்திய தமிழர்கள் 182 பேர் தங்கவைக்கப்பட்டனர். கொழும்பு முகாம்களின் தமிழ் அகதிகளை இலவசமாக விமான மூலம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப் புக்கு அனுப்பிவைக்குமாறு பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எயர் சிலோன் நிறுவனத்துக்கு உத்தரவிட்டிருந்தார்.

D.C-3 என்ற ஜெட் விமானத்தில் (170 பேர்) 05 தடவைகள், எயர் சிலோன் விமானத்தில் (40 பேர்) 10 தடவையும், உத்தரதேவி மற்றும் விசேட ரயில்கள் மூலமும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் வடக்கே வந்தனர்.

கொழும்பில் தமிழர்களுக்கு பாதுகாப்பில்லை என 1958 யூன் கலவரத்திலும் ஆறு சரக்கு கப்பல்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் வடக்கே 05 நாட்கள் அனுப்பிவைக்கப்பட்டது போன்றே 1977, ஆகஸ்ட் இந்த இடப்பெயர்வு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் பலியான மூவரின் மரண விசாரணை யாழ்.நீதிவான் கே.வி.நவரத்தினம் முன்னிலை யில் பல நாட்களாக நடைபெற்றது. வவுனியாவில் 14 தமிழ்க்கிராமங்களில் தீ வைப்பு, கொள்ளை இடம்பெற்று நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக எரிந்தன.

அனுராதபுரத்தில் இருந்து நூற்றுக்கணக்கான

தொடர்ச்சி: பக்கம் 11




தீபச்செல்வன்

ஒரு புகைப்படம் என்பது ஒரு கணத்தை மட்டும் பிடித்து வைப்பதல்ல. சில நேரங்களில் அது ஒரு காலத்தையே நம் முன்னால் நிறுத்திவிடுகிறது. ஈழத் தமிழர்களின் வாழ்வில் புகைப்படங்கள் அத்தகைய நினைவுகளாகவும், சாட்சிகளாகவும், வரலாற்று ஆவணங்களாகவும் உள்ளன. இன்று நாம் பார்க்கும் விடுதலைப் புலிப் போராளிகளின் சில புகைப்படங்கள், நாம் திரும்பிச் செல்ல முடியாத ஒரு காலத்துக்குள் நம்மை அழைத்துச் செல்கின்றன. அந்தப் போராளிகளின் இலட்சியத் தாகம், ஒழுக்கம், மக்களுக்கான விசுவாசம் எனப் பலவற்றை அவை சொல்லுகின்றன. ஒரு வகையில் பெரும் காவியங்கள் சொல்லும் பாடங்களை சில புகைப்படங்கள் எமக்குக் கற்பிக்கின்றன. இதுவே புகைப்படத்தின் பெரும் சக்தி.



## புகைப்பட தினம்

ஆகஸ்ட் 19ஆம் நாள் ஆண்டுதோறும் உலக புகைப்பட நாளாகக் கொண்டாடப்படுகிறது. 1839ஆம் ஆண்டு இதே நாளில் பிரான்ஸ் அரசு லூயி டாகேரால் உருவாக்கப்பட்ட டாகேரியோடைப் (Daguerreotype) புகைப்பட முறையை உலகிற்கு அறிவித்தது.அது நவீன புகைப்பட வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பமாக அமைந்தது.ஆனால் புகைப்படத்தின் முக்கியத்துவம் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பில் மட்டும் இல்லை. வாழும் ஒரு கணம் அடுத்த கணத்திலேயே கடந்த காலமாகிவிடுகிறது. அந்தக் கணத்தைப் புகைப்படமாகப் பிடித்துவிட்டால், அது ஆண்டுகள் கடந்தும் நம்மிடம் திரும்பி வருகிறது. அதனால் புகைப்படம் ஒரு காட்சியாக மட்டுமன்றி நினைவாகவும், சாட்சியாகவும், வரலாற்றின் நிழலாகவும் நிலைக்கிறது.

1972ஆம் ஆண்டு நிக் உட் எடுத்த ‘நேப்பாம் சிறுமி’ புகைப்படம் போரின் கொடூரத்தை உலகின் கண்முன் கொண்டுவந்தது. அதேபோன்று 1993ஆம் ஆண்டு கெவின் கார்ட்டர் எடுத்த சோமாலியப் பஞ்சப் புகைப்படம், பட்டினியால் சோர்ந்த குழந்தையின் அருகே காத்திருக்கும் கழுகை உலக மனச்சாட்சிக்கு முன்வைத்தது. ஒரு புகைப்படம் ஆயிரம் சொற்களைவிட வலிமையானதோடு, ஒரு முழு உலகத்தையே கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது என்பதை இவை உணர்த்தின.

## ஈழத் தமிழர் வாழ்வில் புகைப்படம்

ஒரு பழைய கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தில் இருப்பவர்கள் இன்று உயிருடன் இல்லாமல் இருக்கலாம். அந்த வீடும் அந்த வீதியும் கூட இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் அந்தப் புகைப்படம் மட்டும் கடந்த காலத்தை நிகழ்காலத்துக்குள் கொண்டு வந்து நிறுத்துகிறது. தந்தையின் இளமைப் படம், தாயின் திருமணப் படம், பள்ளிக் குழுப்படம், குழந்தையின் முதல் பிறந்தநாள் எனத் தோன்றும் தனிப்பட்ட புகைப்படங்கள் கூட ஒரு காலத்தின் சமூக வரலாற்றைச் சொல்லும் ஆவணங்களாக மாறுகின்றன.

ஈழத் தமிழர்களின் வாழ்வில் புகைப்படத்தின் அர்த்தம் இன்னும் ஆழமானது. போர், இடப்பெயர்வு, காணாமலாக்கம், மரணம், அகதி வாழ்க்கை என ஒரு தலைமுறையின் வாழ்க்கை சிதறியபோது, பல குடும்பங்களிடம் உறவினர்களை நினைவுகூர வைத்திருப் பது புகைப் படங்கள்தான். காணாமல் போன ஒருவரின் புகைப்படம், இன்று ஒரு குடும்பத்தின் கையில் இருக்கும் ஒரே அடையாளமாக இருக்கலாம். போரில் இறந்த ஒருவரின் புகைப்படம் அவரது இருப்புக்கான நினைவுச் சின்னமாக இருக்கிறது.

ஈழத்தின் கிராமங்கள், யாழ்ப்பாண நகர வாழ்க்கை, விவசாயம், பாடசாலைகள், கோயில்கள், திருமணங்கள், கலை நிகழ்வுகள், இடப்பெயர்வுகள், அகதி முகாம்கள் என ஒரு சமூகத்தின் பல்வேறு காலகட்டங்களும் புகைப்படங்களில் உறைந்திருக்கின்றன.

## புலிகளின் புகைப்படங்கள்

ஈழப் போராட்ட காலத்தில் புகைப்படம் ஒரு கலைச் செயற்பாடாக மட்டுமல்லாமல், ஒரு ஆவணப் பணியாகவும் வளர்ந்தது. விடுதலைப் புலிகளின் புகைப்படத்துறையினர் போராளிகளின் வாழ்க்கையை மட்டுமன்றி, அரசியல், சமூக, கலை, கலாசார, அபிவிருத்தி நிகழ்வுகளையும் பதிவு செய்தனர். ஆரம்ப காலத்தில் இருந்தே விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தின் செயற்பாடுகளை புகைப்படங்களாகப் பதிவு செய்து வந்தனர். தலைவர் பிரபாகரன் அவர்களின் புகைப்படங்கள் போராட்டத்தின் வரலாற்றையும் தலைவன் எனும் ஆளுமை எழுச்சி பெற்ற தருணங்களையும் பதிவு செய்கின்றன. உலகில் ஒரு தலைவனின் புகைப்படத்திற்கு ஒரு அரசு அஞ்சுகிறது என்றால் அது எமது தலைவரின் புகைப்படத்திற்குத்தான்.

அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அத்தனை செயற்பாடுகளும் புகைப்படங்களாக இன்று எம்மிடம் உள்ளன. துயிலும் இல்லங்கள், களமுனைக்காட்சிகள், மருத்துவப்பணிகள், முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக் காட்சிகள் என்று ஒரு வகையில் இன்று இனப்படுகொலைக்கான நீதிக்கும் இன விடுதலைக்கும் போராடுகின்ற கருவியாக புகைப்படங்கள் உள்ளன. அதன் முக்கியம், தேவை என்பவற்றை விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்க்க தரிசனத்துடன் செய்தது என்றால் அது மிகையில்லை.

2004ஆம் ஆண்டு வெளியான போராளிக் கவிஞர் அம்புலியின் மீண்டும் துளிர்க்கும் வசந்தம் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற புகைப்படங்களையும் புலிக ளின் புகைப்படப்பிரிவைச் சேர்ந்த போராளி கஜானி உள்ளிட்டோர் பதிவு செய்திருந்தனர். இன்று பல போர்க்கால ஆவணங்கள் அழிக்கப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள சில புகைப்படங்களே அந்தக் காலத்தின் அரிய காட்சி ஆவணங்களாக உள்ளன. அரசியல் உரைகள் ஒரு காலத்தை பலவிதமாகச் சொல்லலாம். ஆனால் அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் முகங்களையும், அவர்கள் வாழ்ந்த இடங்களையும், நிகழ்வுகளையும் புகைப்படங்கள் நேரடியாக நமக்கு முன்னால் நிறுத்துகின்றன.

## இறுதிப் போரின் சாட்சியம்

2009ஆம் ஆண்டின் இறுதிப் போரில் புகைப்படங்களும் காணொளிகளும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றன. சர்வதேச ஊடகங்களின் அணுகல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த சூழலில், பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினரின் கையடக்கத் தொலைபேசிகளில் பதிவான காட்சிகள் பின்னர் உலகின் கவனத்துக்கு வந்தன. Sri Lanka’s Killing Fields உள்ளிட்ட ஆவணப்படங்கள் புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் நேரடிச் சாட்சியங்களுடன் போரின் இறுதிக்கட்டத்தை உலகுக்கு முன்வைத்தன. முள்ளிவாய்க்கால் குறித்து பேசும்போது இவை வெறும் கடந்த காலக் காட்சிகளல்ல; அவை பதில் கேட்கும் சாட்சிகளாகவும் உள்ளன.



## புகைப்படங்களை பாதுகாப்போம்

ஈழத் தமிழர்களிடம் இன்று ஆயிரக்கணக்கான தனிப்பட்ட புகைப்படங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றில் எத்தனை பாதுகாக்கப்பட்டுள்ளன? எத்தனை புகைப்படங்களின் பின்னணியில் திகதி, இடம், பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன? புகைப்படத்தை எடுப்பது மட்டும் போதாது. அதை பாதுகாக்க வேண்டும். பழைய புகைப் படங்களை டிஜிட்டல் வடிவத்துக்கு மாற்ற வேண்டும். அதில் இருப்பவர்களின் பெயர்களையும், நிகழ்வுகளின் பின்னணியையும் பதிவு செய்ய வேண்டும்.

போருக்குள் மிகச் சிறிய வயதிலிருந்தே புகைப் படங்களைத் தேடியவனாகவும், பின்னர் அவற்றில் பலவற்றை முள்ளிவாய்க்காலில் அழிவுக்குப் பறிகொடுத்தவனாகவும், அந்த அனுபவத்தை நடுகல் நாவலின் வழியாக ஆவணப்படுத்தியவனாகவும், உலகப் புகைப்பட நாள் எனக்கு ஒரு தனிப்பட்ட நினைவுநாளாகவும் இருக்கிறது. ஒரு புகைப்படத்தை அழிப்பது ஒரு காட்சியை அழிப்பதோடு முடிவதில்லை. அது ஒரு குடும்பத்தின் நினைவையும், ஒரு தலைமுறையின் தடத்தையும், சில வேளைகளில் ஒரு இனத்தின் வரலாற்றையும் அழித்துவிடுகிறது. ஆகவே எஞ்சியுள்ள ஒவ்வொரு புகைப்படமும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு நினைவுச் சின்னம்; நாளைய வரலாறு எழுதப்படும் போது அவை பேச வேண்டிய சாட்சிகள்.

 © 2026 இலக்கு இணையம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக தற்கொலைகள் அதிகரித்துவருவதாக சுகாதார துறையினர் கவலை வெளியிட்டுள்ளனர்.போருக்கு பிந்திய காலத்தில் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவான தற்கொலைகள் பதிவாகிவருவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கை எழில் கொஞ்சும் வாவி கரைகளைத் தன்னகத்தே கொண்ட மட்டக்களப்பு மாவட்டம், இன்று ஒரு துயரமான சமூகப் பிரச்சினையை எதிர்கொண்டு நிற்கிறது. அதுதான் இளவயதினர் மத்தியில் சடுதியாக அதிகரித்து வரும் தற்கொலைச் சம்பவங்களாகும். நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ வேண்டிய பதின்ம வயது சிறுவர்களும், இருபதுகளின் தொடக்கத்தில் இருக்கும் இளைஞர்களும் தத்தம் உயிர்களை மாய்த்துக்கொள்ளும் அவலம், ஒட்டு மொத்த கிழக்கு மாகாணத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது வெறுமனே ஒரு தனிநபர் பிரச்சினை அல்ல் மாறாக, நமது சமூகக் கட்டமைப்பின் மற்றும் மனநல அணுகுமுறையின் பலவீனத்தையே இது அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.



இளவயதினர் மத்தியில் தற்கொலை எண்ணம் மேலோங்குவதற்குப் பல்வேறு உளவியல் மற்றும் சமூகக் காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. முக்கியமாக, தற்போதைய போட்டி நிறைந்த சூழலில் கல்வி மற்றும் பரீட்சைகள் தொடர்பான அதீத அழுத்தம் மாணவர்களை மூச்சுத்திணறச் செய்கிறது.


பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மதிப்பெண்களைப் பெற முடியாமல் போகுமோ என்ற பயமும், மற்றவர்களுடன் ஒப்பிடப்படுவதும் அவர்களைத் தவறான முடிவுகளுக்குத் தள்ளுகின்றன. அத்துடன், உணர்ச்சிவசப்படும் வயதில் ஏற்படும் காதல் தோல்விகள், நெருங்கிய உறவுகளில் ஏற்படும் முறிவுகள் போன்றவற்றை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் இன்றைய இளைய தலைமுறையினரிடம் பெருமளவு குறைந்து காணப்படுகிறது. சிறிய ஏமாற்றங்களைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அவர்களின் உணர்வு நிலை பலவீனமாக இருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

நவீன தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களின் தாக்கமும் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன. முகநூல், இன்ஸ்டாகிராம் போன்ற தளங்களில் போலியான பிம்பங்களை உண்மை என நம்பி, தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுத் தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகும் இளைஞர்கள் இன்று அதிகம். இணையவழித் தொல்லைகள், தனிப்பட்ட புகைப்படங்கள் அல்லது தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுமோ என்ற அச்சம், மற்றும் சமூக வலைத்தளங்களில் ஏற்படும் அவமானங்கள் போன்றவை இளவயதினரை மிகக் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றன. மேலும், சமீபகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையும், அதனால் ஏற்படும் உளவியல் சிதைவுகளும் தற்கொலைகளுக்கு ஒரு பிரதான உந்துசக்தியாக மாறியுள்ளன.

குடும்பப் பின்னணியும் பொருளாதார நெருக்கடிகளும் இதில் செலுத்தும் தாக்கம் அளப்பரியது. வேலைவாய்ப்பின்மையால் ஏற்படும் விரக்தி, எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை, மற்றும் வறுமை போன்றவை இளை ஞர்களை மனச்சோர்வுக்கு உள்ளாக்குகின்றன. இதற்கு மத்தியில், பெற்றோர்களுக்கிடையிலான முரண்பாடுகள் மற்றும் உடைந்த குடும்ப உறவுகள் காரணமாக இளைஞர்கள் வீடுகளில் அன்பையும் ஆதரவையும் இழக்கிறார்கள். தங்களது மனவலிகளையும் ஏமாற்றங்களையும் சுதந்திரமாகப் பகிர்ந்துகொள்ள சரியான நண்பர் களோ அல்லது புரிதல் உள்ள உறவுகளோ இல்லாத தனிமைப்படுத்தப்பட்ட நிலை, அவர்களை மரணத்தைத் தழுவத் தூண்டுகிறது.

இந்தச் சமூக அவலத்தைத் தடுத்து நிறுத்த உடனடியானதும் காத்திரமானதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முதலாவதாக, மனநலம் குறித்த விழிப்புணர்வை பாடசாலைகள் மற்றும் கிராம மட்டங்களில் பரவலாக ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் முறையான உளவளத்துணை (ஊழரளெநடட்பெ) வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் தமது பிரச்சினைகளைத் தயக்கமின்றிப் பகிர்ந்துகொள்ளும் நம்பிக்கையான சூழல் உருவாக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவிட்டு, அவர்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் நட்பு ரீதியான உறவைப் பேணுவது இன்றைய காலகட்டத்தில் கட்டாயமா கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு சுமார் 180க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்திருக்கின்றனர் என தகவல் தெரிவிக்கப்படுகிறது. இதே போன்று கடந்த 2020ஆம் ஆண்டு மாத்திரம் 150பேர், தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்தனர்.



கடந்த ஐந்துவருடத்திற்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையில் இரண்டாம் இடத்தில் தற்கொலையில் இருந்துவருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூலை 31 வரையிலான கடந்த 7 மாதத்தில் 84 பேரும் கடந்த ஜூன் மாதத்தில் 8 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், கடந்த வருடம் 2025 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான ஒரு வருடத்தில் 164 தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மாவட்ட பொலிஸ் தலைமைக் காரியாலய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் தற்கொலைச் சம்பவங்கள் மற்றும் சுய தீங்கு விளைவிக்கும் முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் பல காத்திரமான மற்றும் விசேட சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. தனிநபர்கள் சந்திக்கும் உளவியல் சிக்கல்களுக்கு ஆரம்பத்திலேயே தீர்வு காண்பதன் மூலம், இத்தகைய சோகமான முடிவுகளைத் தவிர்க்க முடியும் என்ற நோக்கில் பல்வேறு மட்டங்களில் இந்நடவடிக்கைகள் முடுக்க விட்டுள்ளன.

**மட்டு.நகரான்**

முதலாவதாக, சமூக அடிப்படையிலான மனநல சேவைகளை வலுப்படுத்துவதில் திணைக்களம் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மாவட்டத்தின் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொது சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஊடாக கிராம மட்டத்தில் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியும் பணிகள் நடைபெறுகின்றன. அத்துடன், அடிப்படை ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் இயங்கும் மனநலப் பிரிவுகள் மூலம் இலவச உளவளத்துணை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இளவயதினர் மற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு, பாடசாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் விசேட விழிப்புணர்வு முகாம்கள் நடாத்தப்படுகின்றன. பரீட்சைப் பயம், போதைப்பொருள் பயன்பாடு, இணையவழித் தொல்லைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகளால் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் மாணவர்களுக்குப் மன உறுதிப்பாட்டை வழங்கும் பயிற்சிகளும், சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.



மேலும், சமூகத்தில் மனநலப் பிரச்சினைகள் குறித்த தவறான கருத்துக்களை அகற்றி, மக்கள் தயக்கமின்றி உதவி பெற முன்வருவதை ஊக்குவிக்க பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தொடர் விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொள்கிறது. அவசர காலங்களில் உடனடி உளவியல் உதவிகளையும் வழிகாட்டல்களையும் பெறுவதற்காகச் சுழற்சி முறையில் தொழிற்படும் உதவி தொலைபேசி இலக்கங்கள் பற்றிய விழிப்புணர்வும் மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது.

தற்கொலை என்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை இளைய சமுதாயத்தின் மனதில் ஆழமாக விதைக்க வேண்டும். தோல்விகள் வாழ்வின் முடிவு அல்ல, அது ஒரு புதிய பாடத்தின் தொடக்கம் என்ற புரிதலை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உதிர்ந்துபோகும் ஒவ்வொரு இளவயது உயிரும், நமது சமூகத்தின் கூட்டுத் தோல்வியையே பறைசாற்றுகிறது.

இந்த சமூக கடமையாக கொள்ளவேண்டும். வெறுமனே சுகாதார துறை மட்டும் இதனை முன்னெடுக்க முடியாது. சமூகப் பெரியோர்கள், மதகுருமார், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து, இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டும் அரணாகச் செயற்பட்டால் மட்டுமே இந்தத் தற்கொலை அலையைத் தடுத்து நிறுத்தி, வளமானதும் ஆரோக்கியமானதுமான ஒரு எதிர்காலச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.




மருதன் ராம்

இலங்கையின் கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு நேரடியாக நிதி உதவியை வழங்கும் நோக்குடன் 2023ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் திகதி “அஸ்வெசும” நலன்புரித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



சமூகப் பதிவேடு மற்றும் குடும்பங்களின் பொருளாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டு, தகுதியான பயனாளிகளை வெளிப்படையாகத் தெரிவு செய்வதை இத்திட்டம் முதன்மை இலக்காகக் கொண்டிருந்தது. இருப்பினும், மலையகப் பெருந்தோட்டச் சமூகத்தில் இந்த திட்டம் எந்தளவுக்கு அத்தியாவசிய பாதுகாப்புக் விடயமாக பார்க்கப்படுகிறதோ, அந்தளவுக்கு அதன் நிர்வாக நடைமுறைகளில் ஏற்படும் முறைகேடுகள் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு சிதைப்பதாக அமைந்துள்ளன. மலையகப் பெருந்தோட்டச் சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

நாளாந்த அல்லது மாதாந்த உழைப்பை மட்டுமே நம்பியிருக்கும் இந்த குடும்பங்களில், தேயிலைத் தோட்டத்தில் வேலை நாட்களின் குறைவு அல்லது தொழிலிழப்பு ஏற்பட்டால் ஒட்டுமொத்தக் குடும்பமும் உடனடியாகப் பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளப்படுகிறது. மாதாந்தம் கிடைக்கும் அஸ்வெசும நிதி ஒரு குடும்பத் தின் முழுமையான வருமானப் பற்றாக்குறையை ஈடுசெய்யாவிட்டாலும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள், பிள்ளைகளின் பாடசாலைச் செலவுகள், போக்குவரத்து மற்றும் மருத்துவச் தேவைகளுக்குப் பெரியதொரு ஆதரவாக அமைகிறது.

குறிப்பாக அஸ்வெசும உதவிகளை பெறும் குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான உதவியும் அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படுகிறது. அதேநேரம் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் வேலை செய்யக்கூடிய உறுப்பினர்கள் இல்லாத குடும்பங்களுக்கு இச்சமூகப் பாதுகாப்பு இன்றியமையாதது. குறித்த திட்டத்தின் கீழ் “வறியோர்” பிரிவுக்கு மாதம் ரூ.10,000 மற்றும் “மிகவும் வறியோர்” பிரிவுக்கு மாதம் ரூ.17,500 வழங்கப்படுவதுடன்; முதியோர் கொடுப்பனவு ரூ.5,000 ஆகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகை ரூ.10,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

பல தலைமுறைகளாக நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேயிலை மூலம் அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் பெருந்தோட்ட மக்களுக்கு, இத்திட்டம் வெறும் தயவோ சலுகையோ அல்ல. அது அவர்களின் அடிப்படைச் சமூகப் பாதுகாப்பு உரிமையாகும். இவ்வாறான சூழலில் அஸ்வெசும நலன்புரி திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக பணியாற்றும் சில அரச பணியாளர்களின் முறைகேடுகள் காரணமாக அதன் பயன்கள் முழுமையாக மக்களை சென்றடையாத நிலை காணப்படுகிறது.

இந்தநிலையில் ஹட்டன் நோர்வூட் பகுதியில் அஸ்வெசும பயனாளிகளுக்கு சென்றடைய வேண் டிய சுமார் 1 கோடியே 60 லட்சம் ரூபாய் நிதியை முறைகேடு செய்த சம்பவம் தொடர்பில் சிலர் கைது செய்யப்பட்டமை பேசுபொருளானது. நோர்வூட் சம்பவம் மட்டுமன்றி, அஸ்வெசும திட்டம் தொடங்கப்பட்ட காலம் முதலே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலவிதமான முறைகேடுகள் மற்றும் நிர்வாகக் குளறுபடிகள் தொடர்பில் புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட புதிதிலேயே, சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான மேன்முறையீடுகளும் ஆட்சேபனைகளும் நலன்புரி நன்மைகள் சபைக்குக் கிடைத்தன. வசதியான வீடுகள், நிரந்தர அதிக வருமானம் மற்றும் சொத்துக்கள் கொண்ட நபர்கள் பயனாளிகளாகப் சேர்க்கப்பட்டதாகவும், உண்மையான வறிய பெருந்தோட்டக் குடும்பங்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் நாடு முழுவதிலும் இருந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன.

குறிப்பாக மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் இந்த குற்றச்சாட்டு இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. பலர் குறித்த நலன்புரி திட்டத்திற்காக விண்ணப்பிக்கின்ற போதிலும் அதற்கான அனுமதி கிடைக்காத நிலை தொடர்கிறது. இதேவேளை, பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான கணக்கெடுப்பு மற்றும் தரவு சேகரிப்பின் போது, கள நிலவரத்தை சரியாக ஆய்வு செய்யாமல் சுயமாகவே தகவல்களைப் பதிவேற்றியதாகவும், சில இடங்களில் பெயர்களைப் பட்டியலில் சேர்ப்பதற்குச் சில கீழ்மட்ட அதிகாரிகள் லஞ்சம் கோரியதாகவும் தகவல்கள் வெளியாகின.



இந்த வரிசையில் நோர்வூட் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ரூ.16.2 மில்லியன் நிதி முறைகேட்டைப் போலவே, பயனாளிகளுக்குத் தெரியாமல் அவர்களின் கணக்கு எண்களை மாற்றுதல் அல்லது அமைப்பின் கடவுச்சொற்களைப் பயன்படுத்தி வேறு கணக்குகளுக்கு நிதியைத் திருப்பிவிடும் தொழில்நுட்ப முறைகேடுகள் சில பிரதேச செயலகப் பிரிவுகளில் அவதானிக்கப்பட்டன. அத்துடன் தகுதியான பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு அட்டைகள் வழங்கப்பட்ட போதிலும், மாதக்கணக்கில் வங்கிக் கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படாமல் அரச அதிகாரிகளின் அலுவலகக் கோப்புகளில் கோரிக்கைகள் முடங்கிக்கிடப்பதாகப் பல பெருந்தோட்டப் பகுதி மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

## நோர்வூட் நிர்வாக முறைகேடு

நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் - நோர்வூட் பிரதேச செயலகப் பிரிவில் அஸ்வெசும பயனாளிகளுக்குச் சேர வேண்டிய நிதியில் பெருமளவு முறைகேடு இடம் பெற்றுள்ளதாக வெளிவந்துள்ள தகவல்கள் மலையக மக்களைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. தங்களுக்கு அதிகாரப்பூர்வமாக உரித்தான அஸ்வெசும கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட பயனாளிகள் நேரடியாக முன்வைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த ஊழல் வெளிச்சத்திற்கு வந்தது.

ஹட்டன் பொலிஸ் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவு நடத்திய முதற்கட்ட விசாரணைகளில், நோர்வூட் பிரதேச செயலகத்தின் அஸ்வெசும பிரிவுடன் தொடர்புடைய இரண்டு பெண் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். மேலும் மூன்று அதிகாரிகளுக்கு இதில் தொடர்பிருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ள நிலையில், முறைகேட்டின் மதிப்பு சுமார் 1 கோடியே 62 லட்சம் ரூபாய் வரை தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

மாவட்ட செயலகம் மற்றும் நிதி அமைச்சுடன் இணைந்த தணிக்கை அதிகாரிகள் 2023 முதல் 2025 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுப்பனவுகள் குறித்து விரிவான கணக்காய்வை மேற்கொண்டு வருகின்றனர். அரசாங்கத்தின் கணக்கு வழக்குகளிலோ அல்லது ஊடக செய்திகளிலோ 1.62 கோடி ரூபாய் என்பது ஒரு நிதியியல் இழப்பாக மட்டுமே தோன்றக்கூடும். ஆனால், பெருந்தோட்டக் லயன் அறைகளில் வாழும் ஏழைக் குடும்பங்களின் பார்வையில் இதன் இழப்பு கொடுமையானது.

குறிப்பாக ஒரு குடும்பத்தின் முழு மாதத்திற்குமான அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுச் செலவு பறிபோயுள்ளது. பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் போக்குவரத்துக்கான சிறு தொகையின்றி மாணவர்கள் சிரமப்படுகின்றனர். நாட்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட முதியோர்களின் மாதாந்த செலவுகள் தொடர்கின்றன. அஸ்வெசும திட்டம் நிதியுதவியுடன் நின்றுவிடாமல், பயனாளிகளைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தும் முன்னோடித் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

ஆனால், கள மட்டத்தில் இடம்பெறும் இத்தகைய ஊழல்கள் திட்டத்தின் உயரிய நோக்கத்தையே கேள்விக் குறியாக்குகின்றன. பயனாளிகளின் பெயர்ப்பட்டியல்கள் மற்றும் நிதிப் பரிமாற்றங்கள் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலக மட்டத்தில் வெளிப்படையாகக் காட்சிப் படுத்தப்பட்டுத் தணிக்கை செய்யப்பட வேண்டும். 1924 என்ற தொலைபேசி உதவி இலக்கம் செயல்பட்ட போதிலும், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மனிதத் தலையீடுகளைக் குறைக்கும் டிஜிட்டல் கண்காணிப்பு முறைகள் பலப்படுத்தப்பட வேண்டும். மோசடியால் பாதிக்கப்பட்ட உண்மையான பயனாளிகளை உடனடியாக அடையாளம் கண்டு, அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவை நிதி முழுமையாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.



அரச அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஏழைகளின் பணத்தைக் கையாடல் செய்தவர்கள் மீது தயவுதாட்சணியமின்றிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நில உரிமை, முறையான வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் நிலையான தொழில் வாய்ப்புகளே மலையக மக்களின் வறுமைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய முடியும். அதுவரை, அஸ்வெசும போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எந்தவித முறைகேடுமின்றி, உரிய நேரத்திற்கு, சரியான நபர்களை சென்றடைவதை உறுதி செய்வதும், அரச பொறிமுறையை வெளிப்படைத்தன்மையுடன் இயக்குவதும் அரசாங்கத்தின் முதன்மையான பொறுப்பாகும்.

• • •




பேராசிரியர் முனைவர்
ஆ. குழந்தை
சென்னை

“சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்”(மத். 25: என்று இயேசு கூறிய வார்த்தைக்குஏற்பகிறித்தவம்செயல்படுகிறது.பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனுள்ள பணிகளை செய்கின்றபோது நாம் ஏற்றுக்கொண்ட இயேசுவை பிரதிபலிக்கின்றோம். கிறித்தவம் என்றாலே அன்புப்பணியை வெளிப்படுத்தும் வழிமுறையாகும். ஈகத்தின் வெளிப்பாடு கிறித்தவம். பாதிக் கப்பட்ட, கைவிடப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு பணியாற்றுவது யாவே கடவுளின் அறநெறிச் செயல்பாடாகும். வலுவிழந்தவர்களுக்கு வலிமையூட்டுவது வாழும் கடவுளின் வாழ்வளிக்கும் பணியாகும். வாழ்வு பறிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுக்க வழிகாட்டு வதுதான் மனிதம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பிறரன்புப் பணி செய்யும் கிறித்தவத்தின் இயல்புகளை இங்கு காண்போம்.



## குணப்படுத்தும் பணி

நான் நோயுற்றிருந்தேன் என்னை காணவந்தீர்கள் என்று இயேசு கூறுகிறார். கிறித்தவர்கள் அரசு, பணக்காரர்கள், உயர்த்திக்கொண்ட சாதியினர் செல்லாத இடத்தில் மருத்து வமனைகளைக் கட்டி, நோயினால் பாதிக்கப்பட்ட மக்களைக் குணப்படுத்துகின்றனர். நோய்கள் குறித்து விழிப்புணர்வு கொடுத்து, அதை தடுப்பதற்கான வழிமுறைகளை முன் வைத்து, குணப்படுத்தும் பணியை செய்து வருகின்றனர். இயேசு தனது வாழ்வில் குணப்படுத்தும் பணியை தீவிரமாக செய்தார். மூலிகை தோட்டங்களை வைத்து, மூலிகை மருந்துகளைத் தயாரித்து, மக்களுக்கு குறைந்த விலையில் அல்லது இலவசமாக கொடுத்து நோய்களைக் குணப்படுத்துகின்றனர். தாங்கள் வாழும் சமுதாயத்தை நோயுள்ள சமுதாயமாக மாற்றாமல் குணப்படுத்தப்பட்ட சமுதாயமாக மாற்றுவது மாண்புள்ள பணியாகும்.

## விடுதலைப்பணி

நான் சிறையில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்று இயேசு கூறுகிறார். சிறையில் வாடும் கைதிகளைச் சந்தித்து ஆற்றுப்படுத்துகின்றனர், ஆற்றல்படுத்துகின்றனர். சட்ட உதவிகளைச் செய்து விடுதலைசெய்ய உதவிசெய்வர். சட்ட விழிப்புணர்வு கொடுக்கின்றனர். அரசமைப்பு உரிமைக் கல்வி கொடுக்கின்றனர். ஏழ்மையான கைதிகளின் குடும்பங்களுக்கு உதவிசெய்தல், குழந்தைகளைப் படிக்க வைத்தல், வேலை தேடித் தருதல் போன்ற பணிக ளைச் செய்கின்றனர். வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்றுகின்றனர். சட்ட பாதுகாப்பை வழங்குகின்றனர். இலவச சட்ட ஆலோசனை மையங்களை அமைத்து சட்டக்கல்வி வழங்குகின்றனர்.

புலம்பெயர்ந்தோர் பணி

நான் அன்னியனாய் இருந்தேன் என்னை ஏற்றுக்கொண்டீர்கள் என்று இயேசு கூறினார். ஏதிலிகள்(அகதிகள்), புலம்பெயர்ந்தோர், கைவிடப்பட்டோர், அனாதைகள் ஆகியோருக்கு அடைக்கலம் தந்து, நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். ஐநாவின் வழிகாட்டுதலின்படியும், இந்திய ஒன்றிய அரசமைப்பிற்கு கட்டுப்பட்டு இந்திய ஒன்றியத்தைச் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து உயிருக்கு பயந்து, அடைக்கலம் கேட்டு வந்தவர்களை மனித மாண்போடு வரவேற்று பணிவிடை செய்கின்றனர். இதற்காக பல அமைப்புகள் ஏதிலிகளுக்காவும், புலம்பெயர்ந்தோருக்காகவும், கைவிடப்பட்டோருக்காகவும், அனாதைகளுக்காகவும் உருவாக்கப்பட்டு நற்பணி ஆற்றுகின்றனர். ஏதிலிப் பணி மையம், புலம்பெயர்ந்தோருக்கான மையம், சரணாலயங்கள், அனாதை இல்லங்கள் என பல இல்லங்களை உருவாக்கி பணியாற்றுகின்றனர்.

அறிவுப்பணி

கல்வி நிலையங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், குழுமக் கல்லூரிகள், செவிலியர் கல்வி, பார்வையற்றோர் பள்ளி, ஊமையர்பள்ளிபோன்றகல்விநிறுவனங்களைத்தொடங்கி அறிவை கொடுக்கின்றனர். அறிவைப் பெற்றவர்கள் ஆக்கப்பணிகளைச் செய்வர். மூடநம்பிக்கைகளை போக்கி, பகுத்தறிவைக் கொடுக்கின்றனர். தொழிற்கல்வி வழியாக கையில் ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்கின்றனர். அறிவுள்ள சமுதாயம் அறியாமையை அகற்றிய சமுதாயமாகும். அறிவால் தன்மானமும், தன்மதிப்பும், தற்கையளிப்பும், தன்னெழுச்சியும் பெறுகின்றனர்.

மனித மாண்புப் பணி

ஈதக்குறி(எயிட்ஸ்) என்ற நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித மாண்புடன் வாழ்ந்து இறக்க வழிகாட்டுகின்றனர். தொழுநோயாளிகளையும் மனிதர்களாக மதித்து, மாண்புடன் ஏற்று, உடனிருந்து பணியாற்றுகின்றனர். பாலியல் தொழில் செய்வோர்களை மனித மாண்புடன் புரிந்துகொண்டு பணியாற்றுகின்றனர். திருநர்(திருநங்கைகள், திருநம்பிகள்) மனிதர் என்று கருதி, அவர்களும் வாழ்வதற்கு உரிமை உள்ளதென உரக்கச் சொல்லி, உதவுகின்றனர். மாற்றுத் திறனாளிகளும் மனிதர்கள் என்று கருதி, அவர்களுக்கு அமைப்புகளை உருவாக்கி, மனித மாண்புடன் வாழ உழைக்கின்றனர்.

விழிப்புர்ணர்வுப் பணி

போதை ஒழிப்பும், போதைப் பொருள்கள் குறித்து மக்களுக்கு வழிப்புணர்வு கொடுத்து, அதை தடுப்பதற்கான வழிகளைக் காட்டி. நல்வழிப்படுத்துகின்றனர். மது ஒழிப்பு விழிப்புணர்வைக் கொடுத்து, அதன் ஆபத்துகளை எடுத்தச் சொல்லி, மதுவுக்கு அடிமையாவதை தடுத்து நிறுத்துகின்றனர். புற்றுநோய் தடுப்பு, போலியோ தடுப்பு போன்ற அரசு திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு தருகின்றனர். அரசோடு இணைந்த பணி யாற்றுகின்றனர். பெண் அடிமைத்தனத்தை மக்களுக்கு எடுத்துக் கூறி, கைம்பெண்கள் பாதுகாப்பகம், சுய உதவிக்குழுக்கள், பெண்களுக்கான வேலைவாய்ப்பு போன்றவற்றை குறித்து, விழிப்புணர்வு தருகின்றனர். பெண் சிசுக்கொலைக் குறித்து கடுமையான விழிப்புணர்வு கொடுத்து, அதை தடுத்து நிறுத்தினர்.

## நிவாரணப்பணி

நிலநடுக்கம், புயல், வெள்ளம், சூறாவளிக்காற்று, பஞ்சம், பட்டினி போன்ற இயற்கை சீரழிவுகள் நடைபெறுகின்ற போது உடனடி நிவாரணம் வழங்கின்றனர். இவர்களுக்கு உணவு கொடுத்தல், வீடு கட்டிக்கொடுத்தல், தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர். கொரோனா போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கும் செயற்கை நோய்களும் இயல்பாக வரும் நோய்களும் வருகின்றபோது அவற்றி லிருந்து பாதுகாக்க பல்வேறு அமைப்புகளை உருவாக்கி மக்களைப் பாதுகாக்கின்றனர். மக்களுக்கு வறுமை ஏற்படும்போது அதிலிருந்து பாதுகாக்க உடனடி நிவாரணப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

## உரிமைப்பணிகள்

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை விளக்கிச் சொல்லி, அந்த உரிமைகளைப் பாதுகாக்க கலந்துரையாடலும், போராடவும், பாதுகாக்கவும் உழைக்கின்றனர். குழந்தை கள் உரிமைக்கல்வி, பெண்கள் உரிமைக்கல்வி, தாழ்த்தப் பட்டோரின் உரிமைகள், பழங்குடியினரின் உரிமைகள், அமைப்புசாரா தொழிலளர்களின் உரிமைகள், பிச்சைக்காரக ளின் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உரிமை போன்ற உரிமைகளை நன்கு அறிந்து, மக்களுக்கு எடுத்துக்கூறி; மனித உரிமைகளைப் பாதுகாக்கின்றனர். மனித உரிமைப் போராளிகளின் உரிமை, கைதிகளின் உரிமை, காவல் சித்ரவதைக்கு எதிரான உரிமைகள் போன்ற உரிமைகளை நன்கு விளக்கி உரிமையோடு வாழ வழிகாட்டுகின்றனர்.

## வழிகாட்டும் பணி

மாணவர்களுக்கு வழிகாட்ட மாணவர் மன்றங்கள், கல்லூரியில் அய்கப் அமைப்புகள், பல்கலைக்கழகங்களில் மாணவர் அமைப்புகளை உருவாக்கி, வழிகாட்டுகின்றனர். மாணவர்களுக்கு தொழில் சார்ந்த வழிமுறைகளை கொடுக்க ‘வழிகாட்டி’ என்ற அமைப்பை உருவாக்கி வழி காட்டுகின்றனர். பெண்கள் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், சிறார் மன்றங்கள் போன்றவற்றை அமைத்து அவர்களது ஆளுமையைக் கட்டமைத்து, பாதுகாக்கின்றனர். நல்லதோர்எதிர்காலதலைமுறையினரைஉருவாக்குவதற்கு கிறித்தவ பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது.



இறுதியாக, பல்வேறு ஆக்கப்பணிகளை செய்து இம்மண்ணை வளமுள்ள மண்ணாக மாற்றுவதில் கிறித்தவம் முழுமூச்சாக செயல்படுகிறது. இப்படிப்பட்ட மாண்புமிக்க பணிகளைச் செய்து வரும் கிறித்தவத்தை இன்றைய ஆட்சியாளர்கள் வெளிநாட்டு நிதிப் பெறும் (ஒழுங்குமறை) சட்டத் திருத்தைக் கொண்டு வந்து, இப் பணிகளுக்கு மூடுவிழா நடத்த திட்டமிட்டுள்ளனர். இதனால் நாடு நலிவடைந்துவிடும். ஆக்கப்பணிகள் அழிக்கப்பட்டால் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஒருபோதும் வராது. எனவே வளர்ச்சிப் பணிகளை செய்யும் அனைவ ரோடு அரசு கைகோர்த்து செயல்படும்போது நாடு நல்வழி காணும் என்பதை மறந்துவிடவேண்டாம்.

• • •




A.M.L லம்பேட்

மக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் (Mecca Joint Defence Agreement) சவுதி அரேபியா, பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் அண்மையில் கையெழுத்திடப்பட்ட முக்கியமான கூட்டுப் பாதுகாப்பு (Collective Defence) தொடர்பான ஒப்பந்தமாகும் .இது மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவின் மாறிவரும் பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்பில் (Regional Security Architecture) முக்கியமான மாற்றத்தை பிரதிபலிக்கிறது. ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக எந்தவொரு குறிப்பிட்ட நாட்டையும் சவாலுக்குட்படுத்தவில்லை. மாறாக, Mutual Defence Strategic Coordination Military Cooperation மற்றும் Defence-Industrial Cooperation ஆகியவற்றை வலுப்படுத்துவதே அதன் அடிப்படை நோக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளது.



மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் நிலையற்ற தன்மை(Geopolitical Instability), இரான்-இஸ்ரேல் மோதல், (Iran-Israel) செங்கடல் (Red Sea) பாதுகாப்பு நெருக்கடி மற்றும் வெளிப்புற பாதுகாப்பு உத்தரவாதங்கள் மீதான நம்பிக்கையின் மாற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

சவுதி அரேபியா நீண்டகாலமாக அமெரிக்கா உள்ளிட்ட வெளிப்புற சக்திகளுடன் பாதுகாப்பு உறவுகளைப் பேணி வந்துள்ளது. பாகிஸ்தானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் நீண்டகால Defence Partnership உள்ளது. அதேவேளை, நேட்டோவின் முக்கிய ஆளணிவள பங்காளரான துருக்கி தனது இராணுவ, தொழில்நுட்ப மற்றும் இராஜதந்திர திறன்களை இந்த அமைப்பில் இணைக்கிறது.

இதனால், இந்த ஒப்பந்தம் வெளிப்புற சக்திகளை மட்டுமே சார்ந்திருப்பதை குறைத்து மூலோபாயத் தன்னாட்சியை (Strategic Autonomy) அதிகரிக்கும் முயற்சியாக பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் எகிப்து(Egypt) போன்ற நாடுகளும் இதில் இணையக்கூடும் என துருக்கி தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தை நேரடியா துருக்கி அதிகாரபூர்வமாக இந்த ஒப்பந்தம் வேறு எந்த குறிப்பிட்ட நாட்டையும் இலக்காகக் கொண்டதல்ல என்று தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த ஒப்பந்தம் உருவான மூலோபாயச் சூழல்(Strategic Environment ) இரான்-இஸ்ரேல், (Iran-Israel) USA மற்றும் பிராந்தியத்தில் இரான் (Iran)உடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களுக்கு இடையிலான பதற்றங்களால் ஆழமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, Houthis மற்றும் Red Sea பாதுகாப்பு பிரச்சினைகளும் பிராந்திய பாதுகாப்புச் சூழலில் முக்கியமானவை. ஆனால் ஒப்பந்தம் Houthis, குர்திஸ்தான Kurdish movements அல்லது பலுச் Baloch separatist groups ஆகியவற்றை அதிகாரபூர்வ எதிரிகளாக குறிப்பிடவில்லை. எனவே அவற்றை ஒப்பந்தத்தின் நேரடி இலக்குகளாக அல்லாமல் விரிவான பிராந்திய பாதுகாப்புச் சூழலின் (Wider Regional Security Context) ஒரு பகுதியாகப் பார்க்க வேண்டும். மேலும் ஒவ்வொரு தரப்பினருடனான நோக்கு என்பது வெவ் வேறு தலைப்புகளின் கீழ் ஆராயபடவேண்டியதாகும்

இந்தியா ஏன் கவலைப்பட வேண்டும் என்றால் இந்தியாவிற்கு மிக ;முக்கியமான அம்சம் பாகிஸ்தானின் வலுப்பெறும் மூலோபாய நிலை (Pakistan's Enhanced Strategic Position) ஆகும்.

பாகிஸ்தான் ஏற்கனவே இந்தியாவின் முக்கியமான இராணுவப் போட்டியாளராக உள்ளது. இந்நிலையில் சவுதி அரேபியா (Saudi Arabia) மற்றும் துருக்கி (Türkiye) ஆகிய இரு முக்கிய நாடுகளுடனும் பாகிஸ்தான் தனது பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்துவது புதுடெல்லிக்கு(New Delhi) புதிய மூலோபாயச் சவாலை(Strategic Challenge) உருவாக்கலாம்.

இந்தியாவின் கவலை சவுதி அரேபியா (Saudi Arabia) குறித்து நேரடியாக அல்ல. மாறாக, South Asia–Gulf–Mediterranean strategic connectivity மூலம் பாகிஸ்தானை மையமாகக் கொண்ட விரிவான பாதுகாப்பு வலையமைப்பு உருவாகும் சாத்தியமே முக்கியமானது.

இதன் விளைவாக இந்தியாவின் இந்து சமுத்திர பாதுகாப்பு (Indian Ocean Security) Arabian Sea, Energy Security மற்றும் Pakistan Policy ஆகியவற்றில் புதிய மூலோபாய கணக்கீடுகள்; வகுப்புகள் தேவை. இந்தியா-சவுதி அரேபியா, துருக்கி (India–Saudi Arabia, Türkiye) மற்றும் Israel உறவுகள் தொடர்பில் ஆராயும்போது இந்தியா– சவுதி அரேபியாவுக்கிடையிலான உறவு மிகவும் முக்கியமானது. Energy Security Trade> Investment,Economic Diplomacy மற்றும் Indian Diaspora ஆகியவை இரு நாடுகளையும் நெருக்கமாக இணைக்கின்றன.

அதேவேளை, இந்தியா–துருக்கி இடையிலான உறவுகள் பாகிஸ்தான் தொடர்பான அங்காராவின்(Ankara)வின் நிலைப்பாடுகளால் சிக்கலானதாக உள்ளன. இந்தியா–இஸ்ரேல் உறவு Defence Technology, Security Cooperation மற்றும் Strategic Partnership ஆகிய துறைகளில் முக்கியமானது.

எனினும் இந்தியாவின் மேற்கு ஆசிய கொள்கை வகுப்பானது (West Asia policy) பொதுவாக மூலோ பாய சமநிலை (Strategic Balancing) அடிப்படையில் அமைந்துள்ளது. –இஸ்ரேல்,சவுதி அரேபியா,ஈரான், ஐக்கிய அமீரக குடியரசு உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் ஒரே நேரத்தில் உறவுகளைப் பேணுவது இந்தியாவின் முக்கிய மான இராஜ தந்திர அணுகுமுறையாகும்.

மேலும் சீனா(China) இந்த மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தினுடைய (Mecca Defence Agreement) உறுப்பினர் அல்ல. எனினும் சீனா வை முற்றிலும் புறக்கணிக்க முடியாது.

பாகிஸ்தான் (Pakistan)– சீனா (China) இடையே Mokhd Strategic Partnership உள்ளது. சவுதி அரேபியாவும் சீனாவுடன் பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது. துருக்கி மற்றும் சீனா இடையில் முக்கியமான பொருளாதார உறவுகள் உள்ளன.

எனவே, இந்த சீனா ஒப்பந்தத்தின் நேரடி உருவாக்குநர் என்று கூற முடியாது. ஆனால் இது உருவாக்கும் பலதுருவ பிராந்திய ஒழுங்கு (Multipolar Regional Order ) பீஜிங்கிற்கு (Beijing) கூடுதல் மூலோபாய இடத்தை வழங்கக் கூடும்.



எனவே, மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தம் (Mecca Defence Agreement) கூட்டு பாதுகாப்பு (Collective Defence), Strategic Autonomy kw;Wk; Diversified Security Partnerships ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்பின் உருவாக்கத்தில் உள்ளது.

இதில் இந்தியாவிற்கான முக்கிய கவலை, பாகிஸ்தான்;,சவுதி அரேபியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையிலான வளர்ந்து வரும் Strategic Connectivity ஆகும். இதற்கு இந்தியா , சவுதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு(Gulf) நாடுகளுடனான Strategic Engagement -ஐ ஆழப்படுத்துதல், Israel மற்றும் Iran ஆகிய இரு நாடுகளுடனும் சமநிலையான உறவுகளைப் பேணுதல் Indian Ocean partnerships ஐ வலுப்படுத்துதல் மற்றும் China–Pakistan–Gulf strategic nexus -ஐ தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவை புதுடெல்லியின்(New Delhi) முக்கியமான மூலோபாய முன்னுரிமைகளாக இருக்க வேண்டும்.

இதனால் (மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தம்) Mecca Agreement ஒரு சாதாரண defence pact tpl> US-centred regional order இலிருந்து Multipolar Middle Eastern Security Order நோக்கி நகரும் மாற்றத்தின் ஒரு முக்கிய அறிகுறியாக பார்க்கப்படலாம்.

• • •

## வட்டுக்கோட்டைத்... தொடர்ச்சி...

தமிழர்கள் கிளிநொச்சிக்கு வந்தனர். தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.இந்திய பிரதமர் மொராஜி தேசாயிடம் கவலை தெரிவித்தபோது இலங்கையில் சகஜ நிலையை ஏற்படுத்த இந்தியா உதவும் என கூறினார். பாதிக்கப்பட்ட இந்திய தமிழர்களின் விபரங்களை இந்தியா கோரியது.

1977 ஆகஸ்ட் 13 முதல் 1977 செப்டம்பர்.15 வரை நாட்டில் இடம்பெற்ற கலவரங்களை விசாரணை செய்ய ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் எம்.சி.சன்சோனி தனிநபர் ஆணைக்குழு 1977நவம்பர் 09ல் நியமிக்கப்பட்டது. 1978 பெப்ரவரி 08 முதல் 1979 டிசம்பர் 10 வரை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி. அனுராதபுரம், திருகோணமலையில் ஆணைக்குழு விசாரணை நடைபெற்றபோது பலரும் நேரில் கண்டவற்றை கூறினர்.

திருகோணமலையில் கலவரம் ஆரம்பித்ததும் பொலிசார் தடுக்கவில்லை. பொலிசார் ஜீப்பில் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர்.உப்புவெளி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என இரா.சம்பந்தன் எம்.பி. விசாரணையில் கூறினார். வட்டுக்கோட்டை தீர்மானத்தை வெட்ட நினைத்த ஜே ஆர் ஜெயவர்தனவின் திட்டமே 1977 ஆகஸ்ட் இனப்படுகொலை.

இந்த வன்முறைகளை விசாரிக்க ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் எம்.சி. சன்சோனி தலைமையில் சன்சோனி ஆணையம் தனிநபர் விசாரணை ஆணைக்குழு 1977 நவம்பரில் நியமிக்கப்பட்டது. ஆனால் அந்த குழுவால் எந்த நீதியும் கிடைக்கவில்லை.!

1977ல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்து ஓய்வுபெற்ற நீதியரசர் எல்.எம்.இஸ்மாயில் தலைமையில் குழுவும் நியமிக்கப்பட்டது.

1977ல் பிரதமராக இருந்து இனப்படுகொலைகளை அரங்கேற்றிய ஜே.ஆர்.ஜெயவர்தனா 06 ஆண்டுகளில் ஜனாதிபதியாக இருந்து மீண்டும் 1983 கறுப்பு யூலை இனப்படுகொலையை இதே பாணியில் தென்பகுதியில் அரங்கேற்றினார் என்பதே வரலாறு.

1983 யூலை படுகொலையை நினைவு கூருவது போன்று 1977ஆகஸ்ட் இனப்படுகொலையை நினைவு கூருவதில் ஏன் வடகிழக்கு தமிழ்தேசிய கட்சிகள் தமிழ் அமைப்புகள் பின் நிற்கிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த இனப்படுகொலையும் நினைவு கூரப்பட வேண்டும்.

• • •

# புலம்பெயர் தமிழ்க் கல்வியில் புதிய அத்தியாயம்
# ‘அன்னைத் தமிழ்’
# பாடநூல் வெளியீடு

புலம்பெயர் மண்ணில் வளர்ந்துவரும் மூன்றாம் தலைமுறைத் தமிழ் மாணவர்களின் மொழிக்கல்வியை அவர்களது வாழ்வியல் சூழலுக்கும் கற்றல் தேவைகளுக்கும் ஏற்ப வலுப்படுத்தும் நோக்கில், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தினால் உருவாக்கப்பட்ட ‘அன்னைத் தமிழ்’ பாடநூல் கடந்த 16.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒஸ்லோவில் உள்ள தமிழர் வள ஆலோசனை மையத்தில் (TRVS) நடைபெற்ற சிறப்புமிக்க நிகழ்வில் வெளியிடப்பட்டது.



தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, வரலாறு, மரபு மற்றும் இன அடையாளம் ஆகியவற்றை அடுத்த தலைமுறையினரிடம் இயல்பான முறையில் கொண்டு சேர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இப்பாடநூல், நோர்வே உள்ளிட்ட புலம்பெயர் சூழலில் தமிழைக் கற்கும் மாணவர்களின் தனித்துவமான தேவைகளை மையப்படுத்திய புதிய கல்வி முன்னெடுப்பாகக் கருதப்படுகிறது.



நிகழ்வில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் நிருவாகத்தினர், வளாகப் பொறுப்பாளர்கள், கல்விப் பொறுப்பாளர்கள், நிருவாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பணியாளர்கள், பல்வேறு தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## நீண்டகாலத் தேவையின் வெளிப்பாடு

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் கடந்த 34 ஆண்டுகளாகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் தமிழ் மொழிக் கல்வியை முன்னெடுத்து வருகின்றது. இந்த நீண்டகாலப் பயணத்தில் பல்வேறு உள்ளக மற்றும் வெளியகப் பாடநூல்கள் மாணவர்களின் கற்றலுக்காகப் பயன் படுத்தப் பட்டதுடன், அவற்றின் நடைமுறைப் பயன் பாட்டிலிருந்து பெறப்பட்ட பட்டறிவுகளும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வந்தன.



பாடநூல்களின் உள்ளடக்கம், மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறன், கற்றல் முறை, புலம்பெயர் வாழ்வியல் சூழலுடனான தொடர்பு உள்ளிட்ட பல்வேறு




விடயங்கள் தொடர்பில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நிருவாகத்தினரிடையே நீண்டகாலமாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன. குறிப்பாக, நோர்வே போன்ற புலம்பெயர் சூழலில் வளர்ந்து வரும் தமிழ் மாணவர்களுக்கு, அவர்களது வாழ்வியல் அனுபவங்களையும் மொழிச் சூழலையும் கருத்தில் கொண்ட தனித்துவமான பாடநூல் தேவை என்ற கருத்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதன் தொடர்ச்சியாகவே ‘அன்னைத் தமிழ்’ பாடநூல் உருவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



‘ஒரு வீட்டிற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உலகின் எந்தப் பகுதியிலும் பொதுவானவையாக இருக்கலாம். ஆனால், அந்த வீட்டின் அடித்தளம் அமைக்கும் முறை நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும். அதேபோல், தமிழ் மொழியும் அதன் இலக்கணமும் பண்பாடும் வரலாறும் பொதுவானவை என்றாலும், அவற்றைக் கற்கும் மாணவர்களுக்கான கல்வி அடித்தளம் அவர்கள் வாழும் சூழலுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும் என்ற கல்விசார் பார்வையே ‘அன்னைத் தமிழ்’ பாடநூல் உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.’

பல ஆண்டுகளாக நடைபெற்ற பெற்றோர் – அங்கத்தவர் சந்திப்புகளிலும், ஆசிரியர் சந்திப்புகளிலும் பெறப்பட்ட நேரடிக் கருத்துக்கணிப்புகளின் அடிப்படையிலும், மாணவர்களின் தேவைக்கேற்பப் பாடநூல் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

## மொழியை மட்டும் கற்பிப்பதல்ல – அடையாளத்தை உருவாக்குதல்


‘அன்னைத் தமிழ்’ பாடநூலின் முக்கியத்துவம் தமிழ்மொழிப் பயிற்சியைத்(கற்றலைத்) தாண்டி விரிவடைகிறது. நோர்வேயில் வளர்ந்து வரும் தமிழ் மாணவர்கள், தமிழை வாசிக்கவும் எழுதவும் பேசவும் சிந்திக்கவும் உதவுவதுடன், தமிழர் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் இன அடையாளம் ஆகியவற்றையும் அறிந்துகொள்ளும் வகையில் பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இதன்மூலம் தமிழ் ஒரு பாடமாக மட்டும் மாணவர்களிடம் நிலைபெறாமல், வாழ்வோடு இணைந்த மொழியாகவும், தலைமுறைகளை இணைக்கும் பண்பாட்டுப் பாலமாகவும் அமைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஒருமொழி அடுத்த தலைமுறையிடம் உயிர்ப்புடன் நிலைத்திருக்க வேண்டுமெனில், அதைக் கற்பிக்கும் கல்வி வளங்களும் மாணவர்களின் உலகத்தோடு உரையாடக் கூடியதாக இருக்க வேண்டும்.

## பல்வேறு தளங்களின் பங்களிப்புடன் உருவான நூல்

பாடநூல் உருவாக்கம் என்பது உள்ளடக்கத்தைத் தொகுத்து அச்சிடும் பணியாக மட்டுப்படுத்தப்படவில்லை. பாடநூலாக்கக் குழுவினர், ஆசிரியர்கள், வரலாற்றுத் தகவல்களைத் தெரிவுசெய்தவர்கள், உள்ளடக்கத்தை வடிவமைத்தவர்கள், மொழியைச் செம்மைப்படுத்தியவர்கள், பாடல்களை உருவாக்கியவர்கள், வடிவமைப்புப் பணியை மேற்கொண்டவர்கள் உள்ளிட்ட பலரின் கூட்டு முயற்சியின் பலனாக இந்நூல் உருவானது. இது அன்னையின் கல்விப் பணியில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கி வைக்கும் ஆவணமாகப் பார்க்கப்படுகிறது.



விழாவின் தொடக்கத்தில் பாடநூலின் உருவாக்கப் பின்னணி, உள்ளடக்க அமைப்பு மற்றும் அதன் கல்விசார் நோக்கம் ஆகியவை சார்ந்து விரிவான விளக்கத்தை அன்னை தலைமை இணைப்பாளர் திருமிகு வித்யாதரசர்மா இராதாகிருஷ்ணராஜாக்குருக்கள் அவர்கள் எடுத்துரைத்தார். அத்துடன் இந்தியாவிலிருந்து இணையவழியாக இணைந்த பாடநூல் வடிவமைப்பாளரின் சிறப்புரை மற்றும் கல்வி ஆளுமைமிக்கவர்களின் கருத்துரைகளைத் தொடர்ந்து, ‘அன்னைத் தமிழ்’ பாடநூல் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டு, அதன் பிரதிகள் பல்வேறு வளாகப் பொறுப்பாளர் மற்றும் நிருவாகிகளிடம் வழங்கப்பட்டன.

## இளைய தலைமுறையின் தலைமைத்துவம்

இந்நிகழ்வின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க விடயமாக, அன்னை தலைமை நிருவாகத்தின் இளம் உறுப்பினர்கள் நிகழ்வின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தலில் முக்கியப் பொறுப்புகளை ஏற்றுத் திறம்படச் செயலாற்றினர்.

நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுச் சிறப்பாக வழிநடத்தி,

தொடர்ச்சி: பக்கம் 15




# இலங்கை தனது இடத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளது - இஸ்ரேலிய நிபுணர்

**பாகம் 2 (இறுதிப்பகுதி)**

தமிழில்: **ஆர்த்திகன்**

இலங்கை, இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தனது இடத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளது என்பதே அவரது அபிப்ராயம். ஆனால், அமைவிடம் வாய்ப்புகளுடன் கடமைகளையும் உருவாக்குகிறது என்று அவர் வாதிடுகிறார். "புவியியல் ஒரே நேரத்தில் வாய்ப்புகளையும் பொறுப்புகளையும் உருவாக்குகிறது." இலங்கை, இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் பிற தரப்பினரின் நலன்களுக்கு ஏற்பச் செயல்பட வேண்டிய அதே வேளையில், தனது சொந்தப் பொருளாதார மற்றும் உள்நாட்டுச் சவால்களையும் நிர்வகிக்க வேண்டும். தான் கவனித்த வரையில், "இந்த நிலையை மிகவும் கவனமாகக் கையாள்வது எப்படி என்பதை இலங்கை கற்று வருகிறது," என்கிறார் அவர்.



அவரது பார்வையில், 'நீலப் பொருளாதாரம்' (blue economy) என்பது துறைமுகங்கள் மற்றும் வர்த்தகம் சார்ந்த செயல்பாடுகளுக்குள் மட்டும் அடங்கிவிடுவதல்ல. "நீலப் பொருளாதாரம் என்பது துறைமுக வர்த்தகம் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் சார்ந்தது மட்டுமல்ல," என்று அவர் கூறுகிறார். இது கடல்சார் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மீன்வளம், இணைப்பு வசதிகள் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை ஆகியவற்றையும் உள் ளடக்கியது. இலங்கையின் புவியியல் அமைவிடம் அதற்கு "முக்கியமான மூலோபாய முக்கியத்துவத்தை" அளிக்கிறது; ஆனால், அந்த முக்கியத்துவம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான கணிசமான பொறுப்பையும் அதன் மீது சுமத்துகிறது.

இலங்கைக்கு மேற்கொண்ட தனது முதல் பயணம், அதுவரை அவர் கொண்டிருந்த சில கண்ணோட்டங் களையும் மாற்றியமைத்துள்ளது. நீண்ட காலமாகவே அவர் இங்கு வர விரும்பியிருந்தார்; அதற்கான வாய்ப்பை அவரை இங்கு அழைத்து வந்த மாநாடு வழங்கியது. ஆனால், ஒரு வார காலம் என்பது போதுமானதாக இல்லை என்றே இப்போது அவர் உணர்கிறார். "நான் செய்த மிகப்பெரிய தவறு ஒரு வாரத்திற்கு மட்டுமே வந்ததுதான்; ஏனெனில், இங்கு பார்க்கவும் கற்றுக்கொள்ளவும் இன்னும் எவ்வளவு விஷயங்கள் உள்ளன என்பதை இப்போது நான் உணர்கிறேன்."

அவரை மிகவும் ஆச்சரியப்படுத்தியது "பன்முகத் தன்மை மற்றும் சிக்கலான தன்மையின் கலவை" ஆகும். நாட்டின் இயற்கை அழகு வெளிப்படையாகத் தெரிந்தாலும், மக்கள் தான் அவரது கவனத்தை ஈர்த்த னர். அவர்கள் "மிகவும் அன்பானவர்கள், கண்ணிய மானவர்கள் மற்றும் விருந்தோம்பல் பண்பு மிக்கவர்கள்" என்று அவர் கண்டறிந்தார். ஒப்பீட்டளவில் சிறிய நாடாக இருந்தபோதிலும், அங்குள்ள சமூகப் பன்முகத் தன்மை மற்றும் பல்வேறு சமூகங்கள், மதங்கள் மற்றும் அடையாளங் கள் ஆகியவற்றின் மீதும் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. "இஸ்ரேலில் இருந்து வருபவள் என்ற முறை யில், நான் இதை ஒரு நடுநிலையான பார்வையுடன் கவனிக் கிறேன்," என்று அவர் கூறுகிறார்.




இருப்பினும், முதல் பயணத்தின் எல்லைகளைப் புரிந்துகொள்வதில் அமோஸ் (Amoss) கவனமாக இருக்கிறார். "ஒரே ஒரு பயணம் ஒருவரை அந்த நாட்டின் நிபுணராக மாற்றிவிடாது," என்று அவர் கூறுகிறார். மாறாக, இப்பயணம் கல்வி ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மேலும் பலவற்றைக் கற்றுக்கொள்ள அவரைத் தூண்டியுள்ளது. "எனது இரண்டாவது பயணம் அமையும் என்று நான் பொது வாக நம்புகிறேன்."



இந்தியாவின் 'பன்முகக் கூட்டுறவுக் கொள்கை' (multi-alignment) குறித்த அவரது புரிதலுக்கு அடிப்படையாக அமைந்த அதே கொள்கையின் அடிப்படையிலேயே, இந்தி யப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள சிறிய நாடுகள் குறித்த அவரது வாதமும் அமைந்துள்ளது. சுதந்திரம் என்பது தெரிவுகளைத் தக்கவைத்துக்கொள்வதைச் சார்ந்திருக் கிறது. வல்லரசுகள் போட்டியிடும்போது, சிறிய நாடுகள் அவற்றுடன் ஒத்துழைக்க வேண்டும்; ஆனால், எந்தவொரு ஒற்றை வல்லரசையும் முழுமையாகச் சார்ந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் வாதிடுகிறார். 'பன்முகத் தன்மை' (diversification) என்ற கொள்கையை விளக்கு வதற்கு முன்னதாக, 'தீவிரம்' அல்லது 'கடுமை' (sever-ity) என்பதே தனது முதல் 'சிவப்புக் கோடு' (red line) அல்லது முக்கிய நிபந்தனை என்று அவர் குறிப்பிடுகிறார். பொருளாதாரக் கூட்டணிகள், பாதுகாப்புக் கூட்டணிகள், உள்கட்டமைப்பு, முதலீடு மற்றும் இராஜதந்திர உறவுகள் என அனைத்தும் பன்முகப்படுத்தப்பட வேண்டும். "ஒரு முக்கிய வல்லரசை மட்டும் சார்ந்திருப்பது, இறுதியில் மூலோபாயச் சுதந்திரத்தைக் குறைத்துவிடக்கூடாது," என்று அவர் கூறு கிறார்.



ஆனால், இதற்கான பொறுப்பு சிறிய நாடுகள் மீது மட்டுமே சுமத்தப்படவில்லை. சிறிய நாடுகளுக்கும் தெரிவுகள் உள்ளன என்பதை வல்லரசுகளும் அங்கீகரிக்க வேண்டும் என்று அவர் வாதிடுகிறார். "தாக்கம் செலுத்துவது என்பது தானாகவே நிகழ்ந்துவிடும் என்று அவர்கள் கருதக்கூடாது. அவர்கள் தொடர்ந்து ஈர்க்கக்கூடிய கூட்டாளிகளாகத் திகழ வேண்டும்." எனவே, சிறிய இந்தியப் பெருங்கடல் நாடுகளுக்கு, நடுநிலைமை என்பது அவசியமான நோக்கமாக இருக்க வேண்டியதில்லை. மாறாக, "இறையாண்மை மற்றும் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் அதே வேளையில், தந்திரோபாய நகர்வுகளுக்கான அதிகபட்ச இடத்தைப் பேண வேண்டும்" என்று அமோஸ் வாதிடுகிறார். இந்தச் சொற்றொடர், இந்தியப் பன்முகக் கூட்டணி குறித்த அவரது முந்தைய வரையறையையும், தேர்வுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அது அளிக்கும் முக்கியத்துவத்தையும் எதிரொலிக்கிறது.




இருப்பினும், ஒருவேளை அவரது இறுதி பதிலில் தான், இந்தியப் பெருங்கடல் குறித்த அமோஸின் பரந்த புரிதல் மிகவும் தெளிவாகிறது. அடுத்த பத்தாண்டுகளில் இப்பிராந்தியத்தைப் பற்றி உலகம் எதை முற்றிலும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடும் என்று கேட்கப்பட்டபோது, குறிப்பாக மேற்கத்திய நாடுகளில், இந்தியப் பெருங்கடலின் முக்கியத்துவத்தையும் அதன் பன்முகத் தன்மையையும் பாராட்டுவதில் ஒரு தொடர்ச்சியான தோல்வி இருப்பதாக

**தொடர்ச்சி: பக்கம் 15**

 © 2026 இலக்கு இணையம்



# எர்டோகன் இஸ்ரேலுடன் போரிடத் தயாராக இருக்கிறாரா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

சிரியாவின் அபு அல்-துஹூர் விமானப்படைத் தளத்தின் மீதான இஸ்ரேலின் தாக்குதல் மத்திய கிழக்கில் மற்று மொரு களமுனையை திறக்கலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது. டிசம்பர் 2024-ல் அசாத் வீழ்ந்ததிலிருந்து, சிரியாவில் செல்வாக்கிற்காக இருவரும் போட்டியிட்டு வருகின்றனர். டமாஸ்கஸ் அங்கு துருக்கியப் படைகளை நிலைநிறுத்த அனுமதிக்கப் போகிறது என்ற உளவுத் தகவ லின் பேரில், இட்லிப்பில் உள்ள தளத்தின் மீது இஸ்ரேல் குண்டு வீசியபோது, இந்த வாரம் நிலைமை உச்சகட்டத்தை அடைந்தது. இந்தத் தாக்குதலை சிரியாவின் இறையாண்மை மீதான சட்டவிரோதத் தாக்குதல் என்று அங்காரா கூறியது.



துருக்கி, இருளின் மறைவில் சிரியாவிற்குள் பெரு மளவிலான ஆயுத அமைப்புகளை அனுப்பி வருகிறது. இது துருக்கிய உளவு நிறுவனமான எம்.ஐ.டி-யின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இயல்பாகவே, துருக்கி என்ன செய்ய உத்தேசித்துள்ளது என்பது யாருக்கும் துல்லியமாகத் தெரியாது. இருப்பினும், செவ்வாயன்று(18) இஸ்ரேலிய விமானப்படை நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க துருக்கி திட்டமிட்டுள்ளது என சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் சிரியாவிலிருந்து விலகி இருக்குமாறு அல்லது ஏறக்குறைய ஈரானைப் போல ஆகிவிடுவீர்கள் என்று இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். எர்டோகன், சிரியாவில் ஆபத்தான வழிகளில் துருக்கியை இழுத்துச் செல்கிறார் என்றும், தனது பாதுகாப்பிற்கு எந்தவொரு தரப்பும் அச்சுறுத்தல் விடுப்பதை இஸ்ரேல் அனுமதிக்காது என்றும் இஸ்ரேல் காட்ஸ் பதிவிட்டுள்ளார்.



எனினும் தளத்தின் மீதான இஸ்ரேலின் தாக்கு தலுக்கு முன்னரோ அல்லது தாக்குதலின் போதோ அங்கு எந்தவொரு துருக்கிய இராணுவக் குழுவும் இருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறோம். சிரியா மற்றும் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக, இஸ்ரேல் இதுபோன்ற பொறுப்பற்ற தாக்குதல்களை நிறுத்தி, சர்வதேச சட்டத்தின் கீழ் உள்ள தனது கடமைகளுக்கு இணங்குவது கட்டாயமாகும் என துருக்கிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.




அதேநேரம்,சிரியா விமானப்படைத்தளத் தாக்குதல் "தேர்தலுக்கு முன்னதாக பாதுகாப்பு குறித்த அச்சங்களை உருவாக்கும் வலுவான அரசியல் வாசனையுடன் கூடிய பொறுப்பற்ற மற்றும் முட்டாள்தனமான செயல்" என்று முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் எஹுத் பராக் தெரிவித்துள் ளார். "துருக்கி ஈரான் அல்லது அசாத்தின் சிரியா அல்ல. அமெரிக்காவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ரகசியத் தொடர்புகள் மூலம் தீர்க்க முடியாத எந்த மூலோபாயப் பிரச்சினையும் துருக்கியுடன் இல்லை. நெதன்யாகு முற்றிலும் தடம் மாறிவிட்டார்." நெதன்யாகு இஸ்ரேலின் பாதுகாப்பை விட, தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள் வதற்கான தந்திரங்களிலேயே கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், துருக்கி தாக்கப்பட்டால் போர் புரியத் தயங்கமாட்டோம் என்று துருக்கிய அதிபர் ரெசெப் தையிப் எர்டோகன் சமீபத்திய நேர்காணல் ஒன்றில் தெரி வித்துள்ளார். இஸ்ரேலைத் தடுப்பதற்கான இராஜதந்திர வழிகள் படிப்படியாகத் தீர்ந்து வருகின்றன என்பதை இது காட்டுகின்றது.

எர்டோகனின் வார்த்தைகள், ஆகஸ்ட் 7 அன்று துருக்கி, சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையே கையெழுத்தான 'மெக்கா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்துடன்' (Mecca Joint Defense Agreement) நேரடியாகத் தொடர்புடையவை. இதன் முக்கியக் கொள்கை நேட்டோ (NATO) அமைப்பின் 5-வது விதியை நினைவூட்டு கிறது; அந்த விதி, ஒரு உறுப்பு நாட்டின் மீதான தாக்குதல் அனைத்து உறுப்பு நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்று கூறுகிறது. இது இன்னும் முழுமையான 'இஸ்லாமிய நேட்டோ'வாக மாறவில்லை என்றாலும், வெறும் நட்புக்கான அறிவிப்பை விட இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளிப்படுத்திய எதிர்வினை குறிப் பிடத்தக்கது. மத்திய கிழக்கு நாடுகளின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு "பெரிய நடவடிக்கை" என்று கூறி அவர் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றார். மெக்கா ஒப்பந்தம் அமெரிக்காவுக்கு எதிரான இராணுவக் கூட்டணி அல்ல; மாறாக, பிராந்தியப் பாதுகாப்பு விதிகளைத் தீர்மானிப்பதில் அமெரிக்கா கொண்டுள்ள ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு ஒப்பந்தமாகும். காலப்போக்கில் இந்த வேறுபாடு குறை யக்கூடும்.

இந்த மூன்று நாடுகளுக்கும் வாஷிங்டன் மீது அதிருப்திகள் உள்ளன. சிரியாவில் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியுடன் (PKK) தொடர்புடைய ஆயுதக் குழுக்களுக்கு அமெரிக்கா அளிக்கும் ஆதரவு, F-35 போர் விமானத் திட்டத்திலிருந்து துருக்கி நீக்கப்பட்டது மற்றும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து அளிக்கும் ஆதரவு ஆகியவற்றால் துருக்கி அதிருப்தி அடைந்துள்ளது. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளின் போது தனது எண்ணெய் உள்கட்டமைப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்கா மந்தமான எதிர்வினையே ஆற்றியது குறித்து சவுதி அரேபியா அதிருப்தி கொண்டுள்ளது; மேலும், நெருக்கடியான தருணத்தில் அமெரிக்காவின் உத்தரவாதங்கள் தங்களைப் பாதுகாக்கும் என்பதில் அந்நாட்டிற்கு இப்போது நம்பிக்கை இல்லை. வாஷிங்டனுடனான தனது உறவை பாகிஸ்தான் ஒரு தற்காலிக அல்லது சூழல் சார்ந்த உறவாகவே கருதுகிறது. பல தசாப்த கால ஒத்துழைப்புக்குப் பிறகு, ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத் தடைகளையும் அமெரிக்காவின் ஆர்வத்தில் சரிவையும் சந்தித்தது, அதே நேரத்தில் இந்தியாவுடனான வாஷிங்டனின் உறவுகள் வலுப்பெற்றன.




மூன்று நாடுகளும் எடுத்துள்ள முடிவு மிகவும் எளிமையானது: அமெரிக்காவுடன் ஒத்துழைப்பது சாத்தியம் என்றாலும், பாதுகாப்பை முழுமையாக வாஷிங்டனிடம் ஒப்படைப்பது இனி சாத்தியமில்லை. இந்தக் கூட்டணிக்கு துருக்கி ஒரு பெரிய இராணுவப் படையையும், வளர்ந்த பாதுகாப்புத் தொழில்துறையையும் வழங்குகிறது; அதே நேரத்தில், பாகிஸ்தான் தனது இராணுவ அனுபவத்தையும் அணுசக்தி அந்தஸ்தையும் வழங்குகிறது; சவூதி அரேபியா தனது நிதி வளங்களையும் அரசியல் செல்வாக்கையும் கொண்டு வருகிறது. ஒன்றாக, அவர்கள் வாஷிங்டனுடன் மூன்று சார்புப் பங்காளிகளாக அல்லாமல், ஒரு சுதந்திரமான கூட்டணியாகப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடியவர்கள்.

அங்காரா, ரியாத் மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய நாடுகள் அமெரிக்காவுடனான உறவைத் துண்டிக் கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை, ஆனால் அமெரிக்கக் கொள்கை மீண்டும் கணிக்க முடியாததாக நிரூபிக்கப்பட் டாலோ அல்லது முதன்மையாக இஸ்ரேலிய நலன்களுக்குக் கீழ்ப்பட்டாலோ தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக் கின்றன

தொடர்ச்சி: பக்கம் 15

## எர்டோகன் இஸ்ரேலுடன் ... தொடர்ச்சி...

கிழக்கு மத்திய தரைக்கடல் முதல் தெற்காசியா வரையிலான முழுப் பிராந்தியமும் இந்த புதிய ஒப்பந்தத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. தனது முக்கிய எதிரியான பாகிஸ்தான், இரண்டு செல்வாக்குமிக்க நாடுகளிடமிருந்து கூட்டு உத்தரவாதங்களைப் பெற்றிருப்பதை இந்தியா காண்கிறது. துருக்கி இப்போது தனது சொந்தப் படைகள் மற்றும் நேட்டோ உறுப்புரிமையை மட்டும் நம்பியிருக்காமல், ஒரு தனி பிராந்தியப் பாதுகாப்பு அமைப்பையும் நம்பியிருக்க விரும்புகிறது என்பதை இஸ்ரேல் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே போல், ஏஜியன் கடலில் சைப்ரஸ் மற்றும் கடல் எல்லைகள் தொடர்பாக அங்காராவுடன் நீண்டகாலமாகத் தகராறுகளைக் கொண்டுள்ள கிரீஸ், துருக்கியின் நிலைப்பாடு வலுப்பெறுவதைப் புறக்கணிக்க முடியாது.

எனவே, இதற்குப் பதிலளிக்கும் விதமாக, இந்தியா, இஸ்ரேல் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய, ஒருவேளை சைப்ரஸையும் உள்ளடக்கிய ஒரு கருத்தியல் அச்சு என மற்றொரு கட்டமைப்பு படிப்படியாக உருவாகலாம். இதற்கான அடித்தளம் ஏற்கனவே உள்ளது: இந்தியா இஸ்ரேலுடன் ராணுவ-தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்த்து வருகிறது, கிரீஸ் இஸ்ரேலிய ஏவுகணை மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளைக் கொள்முதல் செய்து வருகிறது; மேலும், பிப்ரவரி 2026-இல் புது தில்லியும் ஏதென்ஸும் பாதுகாப்பு-தொழில்துறை ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்த பிரகடனத்தில் கையெழுத்திட்டதோடு, ஐந்து ஆண்டு காலச் செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் ஒப்புக்கொண்டன.

ஒரு முறையான முத்தரப்பு ஒப்பந்தம் விரைவில் உருவாகும் என்பது பற்றிப் பேசுவதற்கு தற்போது எந்தக் காரணமும் இல்லை. மெக்கா ஒப்பந்தத்தின் தாக்கங்களை தனது தேசியப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு ஆய்வு செய்து வருவதாக இந்தியா அதிகாரப்பூர்வமாகக் கூறியுள்ளது,

ஆனால் எர்டோகன் உண்மையிலேயே இஸ்ரேலுடன் போரிடத் தயாராக இருக்கிறாரா? பதிலடி நடவடிக்கைகள் மிகவும் சாத்தியமானவை என்றாலும், முன் திட்டமிடப்பட்ட ஒரு பெரிய போர் ஏற்பட வாய்ப்பில்லை. துருக்கி ஒரு நேரடி மோதலில் ஆர்வம் காட்டவில்லை. போர் அதன் ஏற்கனவே நலிவடைந்த பொருளாதாரத்தைப் பாதிக்கும், தவிர்க்க முடியாமல் நேட்டோவிற்குள் ஒரு நெருக்கடியைத் தூண்டும், அமெரிக்காவுடனான உறவுகளைச் சிக்கலாக்கும், மேலும் இருதரப்பு மோதலுக்கு அப்பால் விரைவாக அதிகரிக்கக்கூடும். அரசுசாரா அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகள் அல்லது பலவீனமான அண்டை நாடுகள் மீதான தாக்குதல்களை விட, துருக்கியுடன் போர் தொடுப்பது என்பது ஒப்பிடமுடியாத அளவிற்கு அதிக ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதை இஸ்ரேலும் புரிந்துகொண்டுள்ளது.

இருப்பினும், அத்தகைய ஒரு சூழ்நிலை இனி முற்றிலும் சாத்தியமற்றது அல்ல. முக்கிய ஆபத்து மண்டலம் சிரியா ஆகும், அங்கு இரு நாடுகளின் நலன்களும் அடிக் கடி மோதுகின்றன. அங்காரா, டமாஸ்கஸில் தனது செல்வாக்கை ஒருங்கிணைக்கவும், துருக்கிக்கு ஆதரவான உணர்வுகளைப் பேணிக்கொண்டு சிரியாவின் அரசமைப்பை வலுப்படுத்தவும், துருக்கி எல்லையில் விரோத சக்திகள் உருவாவதைத் தடுக்கவும் முயல்கிறது. இஸ்ரேல், துருக்கியின் எழுச்சியைக் கட்டுப்படுத்தவும், இராணுவ நடவடிக்கைக்கான சுதந்திரத்தைப் பேணவும் முயற்சிக்கிறது. சைப்ரஸ் மற்றும் சர்ச்சைக்குரிய கடல் பகுதிகள் உட்பட கிழக்கு மத்தியதரைக் கடல் மற்றொரு சாத்தியமான மோதல் மண்டலமாகும். துருக்கியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என எர்டோகன் ஏற்கனவே விவரித்துள்ள சிரியா மற்றும் லெபனானில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடர்ந்து விரிவடைந்தால், இந்த ஆபத்து மேலும் அதிகரிக்கும். இஸ்ரேல் “அமைதியாக இருக்கப் போவதில்லை”, சிவப்பு கோடுகளைப் புறக்கணிக்கிறது, மேலும் படிப்படியாக அச்சுறுத்தலை துருக்கிய எல்லைகளுக்கு அருகில் கொண்டு வருகிறது என்று துருக்கிய தலைவர் முடிவு செய்தால், அங்காரா இராஜதந்திர அழுத்தத்திலிருந்து, வான் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல், சிரியாவில் உள்ள நேச நாட்டுப் படைகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல், இடைமறிப்புகள், கடற்படை நிலைநிறுத்தம் அல்லது பதிலடித் தாக்குதல்கள் போன்ற வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு மாறக்கூடும். இரு தலைவர்களும் ஒரு முழு அளவிலான போரைத் தொடங்குவதற்கான திட்டமிட்ட முடிவை எடுப்பதை விட, கட்டுப்பாட்டை மீறிச் செல்லக்கூடிய ஒரு உள்ளூர் சம்பவம் நிகழ்வதே மிகவும் யதார்த்தமானதாகத் தெரிகிறது.

## அல்சைமர் நோய்க்கான... தொடர்ச்சி...

கோவில் உள்ள செச்செனோவ் பல்கலைக்கழகத்தின் மருத்துவர்களால் இந்த புதிய முறை உருவாக்கப்பட்டு, அல்சைமர் நோயாளிகளிடம் சோதிக்கப்பட்டது.

ஏற்கனவே உள்ள பெரும்பாலான சிகிச்சைகள், பெரும்பாலும் அறிகுறிகளைக் குறைப்பதையோ அல்லது அல்சைமர் நோயாளிகளின் மூளையில் குவியும் ஒரு தீங்கு விளைவிக்கும் புரதமான பீட்டா-அமிலாய்டைக் குறிவைப்பதையோ நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், இந்த புதிய அணுகுமுறை, உடல் முழுவதும் அழற்சியைத் தூண்டி, நோய்க்குப் பங்களிப்பதாக நம்பப்படும் பொருட்களின் மீது கவனம் செலுத்துகிறது.

சிகிச்சைக்கு முன்னும் பின்னும் மருத்துவர்கள் நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் சோதனைகள், மூளை எம்ஆர்ஐ ஸ்கேன்கள் மற்றும் தண்டுவட திரவ உயிர் குறிப்பான்களைப் பயன்படுத்தி நோயாளிகளை மதிப்பிட்டனர். மூன்று மாதங்களுக்குப் பிறகு, வாய்மொழி நினைவாற்றல், கவனம் மற்றும் தகவல் செயலாக்க வேகம் ஆகியவற்றில் முன்னேற்றங்கள் ஏற்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். நோயாளிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட உறவினர்களும், அவர்களின் அன்றாடப் பணிகளைச் செய்யும் திறனில் முன்னேற்றங்கள் ஏற்பட்டதைக் குறிப்பிட்டனர்.

## அமெரிக்காவின் கடன் ... தொடர்ச்சி...

உயர்ந்துள்ளது.

பைடனின் பதவிக்காலத்தில் கடன் 8.4 டிரில்லியன் டொலர் அதிகரித்தது; இதற்குப் பெருந்தொற்று மீட்புச் செலவுகள் மட்டுமல்லாமல், உள்கட்டமைப்பு முதலீடு, தூய எரிசக்தி மானியங்கள் மற்றும் அவரது ஜனநாயக கட்சியால் முன்னெடுக்கப்பட்ட பிற முக்கியத் திட்டங்களுக்கான பெரும் செலவுகளும் காரணமாக அமைந்தன.

40 ட்ரில்லியன் டொலர் என்பது அமெரிக்காவில் ஒரு நபருக்கு சுமார் 117,000 டொலர் மற்றும் ஒரு குடும்பத்திற்கு 297,000 டொலர் கடன் சுமைக்குச் சமமாகும். வாஷிங்டன் டி.சி.-யை தளமாகக் கொண்ட ‘பீட்டர் ஜி. பீட்டர்சன் அறக் கட்டளை’ (Peter G Peterson Foundation) என்ற சிந்தனைக் குழுவின் தகவலின்படி, இது சீனா, ஜெர்மனி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதாரங்களின் கூட்டு மதிப்பிற்கு ஏறக்குறைய சமமானதாகும்.

## வலிகாமம் வடக்கில்... தொடர்ச்சி...

பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

36 வருடகால அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, எந்தவித நிபந்தனையுமின்றித் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியேற உடனடியாக அனுமதிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

அத்துடன், 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்ட, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான 1810 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் முற்றாக ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் மயிலிட்டிப் பகுதிக்குட்பட்ட நான்கு முக்கிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கோருகின்றனர்.

நீண்டகாலமாக அகதி முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு, தற் போதைய அரசாங்கம் விரைவாகச் செவிசாய்த்து உடனடித் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக உள்ளது.

## சூடானில் மோதல்கள் ... தொடர்ச்சி...

மிகப்பெரிய இடம்பெயர்வு நெருக்கடிகளில் ஒன்றாகும்,” என்று போப் கூறினார். “மோதல், உள்கட்டமைப்பு சேதம் மற்றும் வெள்ளம் ஆகியவற்றின் கூட்டுத் தாக்கம் ஆயிரக்கணக்கான குடும்பங்களை அவர்களின் தாங்கும் திறனுக்கு அப்பால் கடுமையாகப் பாதித்து வருகிறது.”

ஐ.நா.வின் தகவலின்படி, போர் தொடங்கியதிலிருந்து சூடானில் சுமார் 86 லட்சம் (8.6 மில்லியன்) மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் 42 லட்சத்திற்கும் (4.2 மில்லியன்) அதிகமான மக்கள் அண்டை நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். ஐ.நா.வின் கூற்றுப்படி, சுமார் 3.37 கோடி (33.7 மில்லியன்) மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

## ஐரோப்பிய ஒன்றியம் ... தொடர்ச்சி...

தென்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுமையான பயிர்ச் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஐரோப்பிய வங்கிகளின் ஆய்வாளர்கள், இந்த வெப்ப அலைகளால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 50 பில்லியன் யூரோ முதல் 180 பில்லியன் யூரோ வரை இழப்பு ஏற்படக்கூடும் என மதிப்பிட்டுள்ளனர்.

## இலங்கை தனது இடத்தின்... தொடர்ச்சி...

அவர் குறிப்பிடுகிறார்.

பெரும்பாலும், இப்பிராந்தியம் சீனா, அமெரிக்கப் பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்துப் பாதைகள் அல்லது வல்லரசுப் போட்டி போன்ற தனிப்பட்ட கருப்பொருள்களாகச் சுருக்கப்படுகிறது என்று அவர் வாதிடுகிறார். “ஆனால் இந்தியப் பெருங்கடல் அதைவிட மிகப் பெரியது.” அது தெற்காசியா, மத்திய கிழக்கு, கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவை இணைக்கிறது, மேலும் எரிசக்தி வர்த்தகம், விநியோகச் சங்கிலிகள், டிஜிட்டல் இணைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு பெருகிய முறையில் முக்கியத்துவம் பெறுகிறது.

தொலைவிலிருந்து இப்பிராந்தியத்தைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதே மிகப்பெரிய ஆபத்து என்று அவர் குறிப்பிடுகிறார். “தொலைவிலிருந்து இந்தப் பிராந்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாது,” என்கிறார் அவர். ஒரு துறைமுகத்திற்கு ஒருமுறை சென்று வருவதோ அல்லது சீனாவைப் பற்றிய ஒரே ஒரு கதையைக் கேட்பதோ இந்தப் பிராந்தியத்தின் மூலோபாய இயக்கவியலை விளக்கிவிட முடியாது. “ஒவ்வொரு நாட்டிற்கும் அதற்கே உரிய வரலாறு, உள்நாட்டு விவகாரங்கள், அரசியல் உணர்வுகள் மற்றும் நலன்கள் உள்ளன.”

அவரது இறுதிக் கருத்து, அந்த ஏழு பதில்களிலும் இழையோடும் மையக் கருப்பொருளை மீண்டும் நினைவூட்டுகிறது. உலகத்துடனான இந்தியாவின் உறவை வெறும் கூட்டணி அமைப்புகளாக மட்டும் சுருக்கிவிட முடியாது. இந்தியா-இஸ்ரேல் இடையிலான உறவை வெறும் பாதுகாப்பு விவகாரமாக மட்டும் பார்க்க முடியாது. இலங்கையை வெறும் பெரிய வல்லரசுகளுக்கு இடையிலான போட்டிக்குரிய ஒரு களமாக மட்டும் கருத முடியாது. அதேபோல, இந்தியப் பெருங்கடலை வல்லரசுகள் தங்கள் மூலோபாய நலன்களைக் குறிக்கும் ஒரு வரைபடமாக மட்டும் சுருக்கிவிடவும் முடியாது.

“நான் ஒரு தவறைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால்,” என்று கூறும் அமோஸ், “இந்தியப் பெருங்கடலை ஆழமான புரிதல் தேவைப்படும் ஒரு சிக்கலான அரசியல் பிராந்தியமாகப் பார்ப்பதற்குப் பதிலாக, வரைபடத்தில் உள்ள ஒரு மூலோபாய இடமாகவே நாம் தொடர்ந்து கருதுகிறோம் என்பதுதான் அது,” என்று குறிப்பிடுகிறார்.

இந்தியா, இஸ்ரேல் மற்றும் பரந்த மூலோபாயக் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளை நீண்ட காலமாக ஆய்வு செய்து வருபவரான அவருக்கு, இலங்கையுடனான முதல் அனுபவம் அந்தப் புரிதலில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளது. அவரது பார்வையில், இந்தியப் பெருங்கடல் என்பது வெறும் வல்லரசுகள் சந்திக்கும் இடம் மட்டுமல்ல; அது மாறுபட்ட வரலாறுகள், நலன்கள், பலவீனங்கள் மற்றும் லட்சியங்களைக் கொண்ட நாடுகள் தங்கள் தெரிவுகளைத் தக்கவைத்துக்கொள்ள முயலும் ஒரு களமாகும். அந்தப் பிராந்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு, மூலோபாய வரைபடத்தைத் தாண்டிப் பார்த்து, அப்பிராந்தியத்திற்கு உண்மையான அர்த்தத்தை அளிக்கும் நாடுகள் மற்றும் சமூகங்கள் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

முற்றும்

**நன்றி: சிறீலங்கன் கார்டியன்**

## புலம்பெயர் தமிழ்க் ... தொடர்ச்சி...

நிகழ்ச்சிகளைத் தெளிவாகவும் தன்னம்பிக்கையுடனும் தொகுத்து வழங்கி இளம் உறுப்பினர்களின் பங்களிப்பு நிகழ்வின் வெற்றிக்கு வலுசேர்த்தது.

‘அன்னையின் எதிர்காலம் இளைய தலைமுறையின் கைகளில்’ என்ற நம்பிக்கைக்கு இந்நிகழ்வு ஒரு செயல்வடிவமான எடுத்துக்காட்டாக அமைந்தது.

### புலம்பெயர் தமிழ்க் கல்விக்கான புதிய பாதை

‘அன்னைத் தமிழ்’ பாடநூல் வெளியீடு, புலம்பெயர் தமிழ்க் கல்வி எவ்வாறு அந்தந்த சமூகச் சூழலுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு முன் எடுத்துக்காட்டாகவும் அமைகிறது. எதிர்காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பெறப்படும் பட்டறிவுகளின் அடிப்படையில் இந்நூல் தொடர்ந்து மேம்படுத்தப்படும்.


### ‘தமிழ் என்பது தலைமுறைகளை இணைக்கும் பாலம்; பாடநூல் என்பது அந்தப் பாலத்தை உறுதிப்படுத்தும் அடித்தளம்.’

அந்த அடித்தளத்தை வலுப்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புதிய கல்விப் பயணம், புலம்பெயர் மண்ணில் தமிழ் அறிவை விதைத்து, எதிர்காலத் தலைமுறைகளில் தமிழ்ப்பற்றை வளர்த்து, ‘தமிழ் எங்கள் அடையாளம்’ என்ற உணர்வை நிலைநிறுத்தும் நீண்ட பயணமாகத் தொடர வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது. புலம்பெயர் சூழலில் தமிழ்க் கல்விக்கு இப்பாடநூல்கள் வலுச்சேர்ப்பதோடு வழிகாட்டியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



புகைப்படம்
பி.ஹர்ஷினி பாலையூற்று



புகைப்படம்
பி.ஹர்ஷினி பாலையூற்று



இ.ஜோயல்
செல்வநாயகபுரம்

# நேரம்

காணாமல் ஓடும் காற்றின் பிள்ளை நீ
கையில் பிடிக்க முடியாத மழையின் துளி நீ .....
இருப்பதும் இல்லாமல் இருந்தும் எல்லாம் நீ .....

“நேரமில்லை” என்று சொல்லும் நாவுக்கு
“நான்தான் குரு” என்று சிரிக்கும் மொழி நீ....
இளமையில் தொலைத்து, முதுமையில் தேடும்
பாடல் நீ ......

ஒரு நிமிடம் - ஒரு வாழ்க்கையை மாற்றும்
ஒரு நிமிடம் - ஒரு வார்த்தையை அழிக்கும்
ஒரு நிமிடம் - ஒரு சந்திப்பை தரும்

திரும்பி வராது, திரும்பி கேட்டுப் பார்க்காது
சோகம் வந்தாலும் ஓடும், சந்தோஷம்
வந்தாலும் ஓடும் .....

உன்னை விட விலையுயர்ந்தது ஒன்றும்
இல்லை
உன்னை விட கொடுமையானதும் இல்லை ......

**சு. திகழினி**
கன்னியா



# தாயகமும் வாழ்வும்


SRI LANKAN GOVERNMENT!!!
"RETURN OUR ANCESTRAL LANDS TO US IMMEDIATELY!"
Support the continuous struggle for rights of people who have lost their lands for a long period in Valikamam North, Jaffna; Keppapulavu, Mullaitivu; Mylathamadu & Madhavanai, Batticaloa...
DEMOCRATIC ATTENTION-SEENING PROTEST
"LAND IS OUR RIGHT! JUSTICE IS OUR DEMAND! FAIRNESS IS OUR GOAL!"
MSEDO
MANNAR SOCIAL AND ECONOMICAL DEVELOPMENT ORGANIZATION




Blue Water Sports
1500
Services
Fishing
Boat Tour
94 77 2298 041
94 76 7078 044